# செம்மண்

நிலம் 3 துகள் 124 வள்ளுவர் ஆண்டு 2052, 03 - 09 மார்கழி 2022 வாரமலர் பக்கங்கள் 30


## மின் கட்டணம் உயரும் மின்வெட்டும் தொடரும்

மின்சாரக் கட்டணங்கள் மீண்டும் உயர்த்தப்படும் என்று மின்சார சபை உறுதியாகத் தெரிவிக்கின்றது. அதற்கான அனுமதி அமைச்சரவையில் வழங்கப்பட்ட நிலையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கினால் என்ன வழங்காவிட்டால் என்ன அதிகரிப்பு நிச்சயம் என்கிறது மின்சார சபை.

டொலர் தட்டுப்பாடு, அதனால் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை என்பவற்றால் மின்சார உற்பத்திச் செலவுகள் எகிறிய நிலையில் மின்சாரசபைக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுவருவதாக ஆட்சியாளர்கள்

பக்கம் 03

### வைத்தியசாலைகளில் பெரும் தட்டுப்பாடு

## அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக்கொள்ள உதவுங்கள்

### மக்கள் பிரதிநிதிகளிடம் ஆறு திருமுருகன் கோரிக்கை



யாழ்ப்பாண மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவவேண்டும் என்று செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.பொது மக்களின் அவசிய அத்தியாவசிய தேவையாக

பக்கம் 02



### சண்டியர்களைக் கொண்டு

## மக்கள் போராட்டத்தை முடக்கினால் பாரதூரமான விளைவுகளே ஏற்படும்

### சரத்பொன்சேகா நாடாளுமன்றில் எடுத்துரைப்பு

சண்டியர்களை கொண்டு மக்கள் போராட்டத்தை முடக்க முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளே ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேலும் சண்டியர்களை வெளியேற்றாமல் உரிமைக்காக போராடும் மக்களை காலி முகத்திடலில் இருந்து வெளியேற்றும் காவல்துறையினரின் செயற்பாடுகள் வெட்கக்கேடானது என்றும் சாடியுள்ளார்.

பக்கம் 03

## பாரிஸ் கிளப்பில் இலங்கைக்கு சாதகமான முடிவு எடுக்கப்பட்டது

பெரும் கடன்களை வழங்கும் நாடுகளின் குழுவான பாரிஸ் கிளப் இலங்கையின் கடனை மீளச் செலுத்த 10 வருட கால அவகாசத்தை பெற்றுக்கொடுப்பதற்கான முன்மொழிவைவைத்துள்ளது.

இதன் மூலம் இலங்கையின் கடன்களை காலம் தாழ்த்திக் கொடுப்பதற்கான சட்ட உரிமை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு சாதக நிலையை ஏற்படுத்தும் விதத்தில் இந்த மறுசீரமைப்பு திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்களான இந்தியா மற்றும் சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களில் பாரிஸ் கிளப்பின் இந்த முன்மொழிவு தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் சிறிலங்கா அரசு ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டியிருந்தாலும் அதன் உதவியை பெற்றுக்கொள்ள இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து கடன் உத்தரவாதங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் கடனை மறுசீரமைக்க தாம் தயாராக இருப்பதாக பாரிஸ் கிளப் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# சிங்கள அரசியல்வாதிகள் திருந்தி வரவேண்டும்

தமிழில் ஒரு சொலவடை உண்டு. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பது அது. இலஙகையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களின் அணுகுமுறை அப்படித்தான் உள்ளது-. தமிழர்கள் தனிநாடு கேட்டபோது அவர்கள் இணைப்பாட்சி (சமஷ்டி) என்றார்கள். தமிழர்கள் இணைப்பாட்சி என்று இறங்கி வந்தபோது அவர்கள் மாகாண சபைகள் (13ஆவது திருத்தம்) என்றார்கள். சரி மாகாண சபையையாவது முழுமையாகச் செயற்படுத்துங்கள் என்று கேட்கும்போது மாவட்ட சபைகள் என்கிறார்கள். இப்படியே கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிக் கொண்டிருக்கிறது. ஒருவேளை தமிழர்கள் மாவட்ட சபைக்கு இணங்கிகொண்டால் அரசியல் பரவலாக்கம், உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுதல் என்று இன்னும் கீழிறங்கிப் போவதற்கும் அவர்கள் தயாராகவே இருப்பார்கள். இது இந்த நாட்டின் சாபக்கேடு. இந்த அணுகுமுறையால்தான் இனப் போர் தீவிரம் பெற்றது, இழப்புக்கள் ஏற்பட்டன. ஒரு அரசியல் தீர்வு கிடைக்கப்பெறாமலேயே போனது. அதிலிருந்து பாடங்கள் கற்றுக்கொள்ளாத அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் அதனையே செய்துகொண்டிருக்கிறார்கள். இது ஏற்புடையது அல்ல. தமிழர்கள் இந்த நாட்டில் மிக நீண்ட காலமாகப் போராடி வருவது அதிகாரப் பகிர்வுக்காகத்தான். போரில் தோற்ற-விட்டதனால் சிங்களவர்கள் கொடுக்கும் எதனையாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்திப்பது, போரில் வெற்றி பெறுவதுதான் ஒரே வழி என்று அடுத்தடுத்த தலைமுறைகளைச் சிந்திக்கச் செய்துவிடும். அந்தத் தவறை இன்றைய அரசியல் தலைவர்கள் இழைக்கக்கூடாது.

மாவட்ட சபைகள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேனவே அண்மையில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். அதனைப் பரிசீலிப்பதற்குத் தான் தயார் என்று தற்போதைய அரச தலைவரும் மைத்ரியின் ஆட்சியில் தலைமை அமைச்சராக இருந்தவரு-மான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ரணில் தன்னிடமும் இதே மாவட்ட சபைகளைப் பற்றிப் பேசினார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.

ரணிலும் மைத்திரியும் 2015இல் ஆட்சியமைத்த பின்னர் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக்கி மேற்கொண்ட தீர்வு முயற்சிகளின்போது இந்த மாவட்ட சபைகள் பற்றிய கருத்தைத் தெரிவிக்கவில்லை. அந்த முயற்சிகளின் பயனாக எட்டப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைபின் எந்தவொரு இடத்திலும் மாவட்ட சபைகளைப் பற்றிச் சொல்லப்படவும் இல்லை. அப்போது இணங்கிக் கொண்டவர்கள் இப்போது மாவட்ட சபைகள் பற்றி பேசுவது அவர்களின் தீர்வு தொடர்பான பேச்சுக்களின் உள்நோக்கத்தையும் நேர்மையையும் கடுமையாகச் சந்தேகிக்கவே செய்கின்றன.

எல்லோரும் இணக்கம் கண்ட ஒரு தீர்வுப் பொதியிலிருந்து முன்னகர்ந்து செல்வதற்குப் பதில் நாட்டையும் மக்களையும் பின்னோக்கி இழுத்துச் சென்று மீண்டும் மீண்டும் படுகுழியில் தள்ளும் செயலில் இருந்து சிங்கள அரசியல்வாதிகள் இனியாவது திருந்திவரவேண்டும். அதுவே இந்த நாட்டின் விடியலுக்கான ஒரே வழி.

## அத்தியாவசிய...

மருந்து உள்ளது .
மருந்துகள் இன்றி மக்கள் அவலப்படுகின்றார்கள் பெரும்பாலும் வைத்தியர்கள் வெளியிலேயே வாங்குமாறு எழுதிக் கொடுக்கின்றார்கள். வெளியே விற்பனை செய்கின்ற மருந்து விற்பனை நிலையங்களில் மருந்துகளின் விலை உச்சத்தை தொட்டுள்ளது.

மிகக் கவலையான விடயமாக தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் வைத்தியசாலையில் அடிப்படை மருந்துகள்கூடத் தட்டுப்பாடாக உள்ளது. வைத்தியசாலையின் வைத்தியர்கள் இதைப் பற்றி அறிவித்துள்ளார்கள். ஆனால் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த இந்த விடயத்தில் கவனம் செலுத்தாது இருக்கிறார்கள். குறிப்பாக வைத்தியசாலைக்கு செல்லும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

சமய நிறுவனங்களாக இருக்கிற நாங்கள் 12 இலட்சம் ரூபாவுக்கு மருந்தினை பெற்று கொடுத்துள்ளோம். இந்த வாரம் செல்வச் சந்நிதி ஆச்சிரமம் 8 இலட்ச ரூபாவிற்கு மருந்தை பெற்றுக் கொடுத்துள்ளது. தெல்லிப்பளை வைத்தியசாலையில் இளம்பிள்ளைகளுக்கான மருந்துகளை ஏற்றுகிறார்கள். வயோதிபர்களுக்கு மருந்து ஏற்றுவதற்கு மருந்து இல்லாமையால் வைத்தியர்களும் என்ன செய்வது என்று அந்தரித்து வருகிறார்கள்.



இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் வெளிநாட்டு துதுாவராலயங் கள்,உதவி நிறுவனங்களிடமாவது கோரிக்கைகளை முன்வைத்து மக்களுக்கான உதவிகளை செய்யவேண்டும். அவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருக்கிறார்கள்.

பலர் உதவி செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த விடயத்தை தெரிவுபடுத்தவேண்டும். மக்களை நேசிப்பவர்கள் வீடுவீடாக சென்று வாக்கு கேட்பவர்கள் ,மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் வெறுமேன விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும் , கொண்டாட்டங்களுக்கும் போவது மட்டுமல்ல நோயுற்றவர்கள், துன்பப்படுபவர்கள் மத்தியில் சென்று அவர்கள் பிரச்சினைகளை கேட்கவேண்டும்.

தயவுசெய்து மக்கள் பிரதிநிகளாக இருப்பவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் நேரடியாக வைத்தியாலைகளுக்கு செல்லுங்கள். மருந்துகளைப் பெற உதவுங்கள். கற்றறிந்த சமூகம், மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுபவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருப்பது மிகக் கவலையான விடயம். உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மட்டுமன்றி யாழ்போதனா வைத்திய சாலை உட்பட அனைத்து பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளின் விவரங்களை பெற்று தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலோ அல்லது தங்களுடைய சிறப்புரிமையை பயன்படுத்தி இந்தியா உள்ளிட்ட சகல துதுாவராலயங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்தோ நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு முன்வருமாறு தமிழ் மக்கள் சார்பில் சமூக பொறுப்புள்ளவன் என்ற வகையில் சமூகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## மின் கட்டணம்...

தொடர்ந்து கூறிவருகின்றனர். அதனைச் சமாளிக்கும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் ஏற்கனவே அதிகரிக் கப்பட்டுள்ளன. எனினும் அந்த அதிகரிப்பால் நட்டத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை என்கிறது மின்சார சபை. இதைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் நட்டத்தைத் தடுக்கும் வகையில் மீண்டும் மின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கட்டம் கட்ட மாக அந்த அதிகரிப்பை மேற்கொள்வதற்கும் அது தீர் மானித்துள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த அதிகரிப்புக்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. இருப்பினும் கட்டணங்கள் அதிகரிக்கும் என்று மின்சார சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் மின் வெட்டு நேரம் குறைவதற்கு வாய்ப் பில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள இரண்டரை மணி நேர வெட்டுத் தொடரும்.

---

## மக்கள்...

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உணர்வுபூர்வமாகவும் வெளிப்படைத்தன்மையுடன் உதை பந்தாட்ட போட்டியினை கட்டார் நாட்டின் இளவரசர் ஒழுங்குபடுத்தியதாக சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார். இதன் காரணமாகவே அங்கு போட்டிகள் சிறப்பாக இடம் பெறுகின்றது என்றும் இதனை சிறந்த உதாணமாக எடுத் துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசராகும் கனவுடன் கடந்த காலத்தில் இருந்த ஒருவரிடம் இவ்வாறான செயற்திட்டம் வழங்கப் பட்டிருந்தால் வங்குரோத்து நிலை அடைந்துள்ள நாட்டில் மிகுதியாக உள்ள வளம் கூட மோசடி செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

---

**18**

# வாரம் ஒரு சொல்....!

### கறல்

இந்தச் சொல் துருப்பிடித்த பொருள் என்கிற பதத்தில் வருகிற துருப்பிடித்தலைக் குறிக்கிறது. துருப்பிடித்தல் என்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் ஆத்திரம், கோபம், பழிவாங்கும் உணர்வு, சகிக்க முடியாத மனநிலை ஆகிய அர்த்தங் களில் வினைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"அதுக்குள்ள போகாத கறல் கம்பிகள் கிடக்கு"
"கறல் கம்பி குத்தினால் கட்டாயம் ஏற்பூசி போட வேணும்"
"அந்தத் தகர மேசையை வெளியால வைக்க வேண் டாம் மழையில் நனைந்தால் கறல் பிடித்துவிடும்"
"கேற்றில் நாய் மூத்திரம் பெய்ததால் கறல் பிடிச்சுப் போச்சு"

மேற்கண்ட வாக்கியங்களில் துருப்பிடித்தல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண் டீர்கள். கீழ்வரும் வாக்கியங்களில் அது வெவ்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண லாம்.

"அவன் மச்சானைக் கொல்லவேணும் என்ற கற லோட நிறையக் காலம் இருந்திருக்கிறான்"
"அந்தக் கொலைக்குக் காரணம் அவங்களுக்குள்ள இருந்த பழைய கறல்தான்"
"அவன் சிறைக்குள்ள இருக்கேக்க வெளியில் வந்து பழிவாங்க வேணும் என்ட கறலோடதான் இருந்திருக் கிறான்"

கறல் என்கிற சொல் வினையாகப் பயன்படும்போது ஒரு செயல் நடந்து முடிந்த பின்னரே தெரியவருகிறது. கொலையோ, தீ வைப்போ, வேறு சூழ்ச்சிகளோ நீண்ட காலம் திட்டமிட்டதன் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டாலும் கறல் என்கிற வினை வெளியில் தெரிவதில்லை. ஆகக் கறல் என்பது புதியதொரு அர்த் தத்துடன் யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் பாவனை யிலுள்ளது.


# போர்க் குற்றவாளிகள் இரு முனைக் கூர்க் கத்தி!

விதுரன்

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 30 வருடகாலமாக நீடித்து வந்த போர் 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இறுதிப் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு வெளிநாடுகளில் இடமளிக்கக்கூடாது என்று தமிழ் அரசியல் தலைவர்களின் பேசி வருகின்றனர். ஆனால், ஐரோப்பிய நாடுகளுக்கோ அமெரிக்காவுக்கோ இவ்வாறான கோரிக்கைகள் எவற்றையும் விடுக்கும் நிலையில் தமிழ் அரசியல்வாதிகளுக்குத் திராணியில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகேட்டுப் போராட்டங்களை நடத்துவோர் இதை ஒரு கோரிக்கையாக (போர்க்குற்றவாளிகளுக்கு வெளிநாடுகள் தஞ்சமளிக்கக்கூடாது என்பதை) தமது கோசங்களிலும் சுலோகங்களிலும் உள்ளடக்கியிருக்கிறார்களே தவிர அதற்கு அப்பால் அவர்களாலும் எதுவும் செய்யமுடியவில்லை.

> “ரி.என்.ஏ. சிவில் பாதுகாப்பு, படை ஒன்றை உருவாக்கி சிறுவர்களைப் போரில் கொன்றனர். இதுபோன்ற குற்றங்களில் பொறுப்புக்கூறவேண்டிய பலர் தமிழ்த் தலைவர்களாக வலம் வருகின்றார்கள்.”

போர்க் குற்றம் புரிந்தனர் என்று கூறப்படுகிற படைத் தளபதிகளை ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் எவ்வித தடையும் இன்றித் தமது நாடுகளுக்கு அனுமதிக்கின்றன. அதேவேளை குற்றம்சாட்டப்பட்ட தளபதிகள் அங்கு கூட்டுப் படைப் பயிற்சி ஒத்திகைகளில் ஈடுபடுகிறார்கள். குறைந்த பட்சம் இந்தியாவுடன் கூட இந்த விடயத்தில்கூட சாதிக்கும் நிலையில் தமிழ்த் தலைவர்கள் இல்லை.



**கனடாவின் தீர்மானம்**

1987இல் இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது ஒட்டுக்குழுக்களாகத் தமிழ் ஆயுதக் குழுக்கள் பல செயற்பட்டன. இந்தியப் படையின் பாதுகாப்பில் அவை செயற்பட்டன. புலிகளையும் புலிகளின் குடும்பங்களையும் இணைந்து கொன்றன. சிறுவர்களை வலிந்து பிடித்துத் தமிழ்த் தேசிய படையாக்கினார்கள். ரி.என்.ஏ. சிவில் பாதுகாப்பு, படை ஒன்றை உருவாக்கி சிறுவர்களைப் போரில் கொன்றனர். இதுபோன்ற குற்றங்களில் பொறுப் புக்கூறவேண்டிய பலர் தமிழ்த் தலைவர்களாக வலம் வருகின்றார்கள். அப்படிப்பட்ட ஒருவராக ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இருக்கிறார். அவர் கனடாவுக்குள் செல்வதற்குக் கனடா அரசு தடை விதித்தது. சுரேஷ்பிரேமச்சந்திரனின் மனைவி, பிள்ளைகள் கனடாவில் வசித்து வருகிறபோதிலும் அவர் மீதான குற்றச்சாட்டுக்களைக் காரணம்

# "பெரும்பான்மைவாதம் வெற்றி பெறவில்லை, அதனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை"

## புக்கர் பரிசு வென்ற ஷெஹான் பேட்டி

இந்த ஆண்டுக்கான புக்கர் பரிசானது தமிழர்களுக்கு மிகவும் நெருக்கமானது. பரிசை வென்ற ஷெஹான் கருணாதிலக இலங்கையைச் சேர்ந்தவர் என்பது மட்டும் அதற்கான காரணம் இல்லை; அவர் எழுதிய 'த செவன் மூன்ஸ் ஆஃப் மாலி அல்மெய்டா' நாவல் பல வகைகளில் நாம் தொடர்புபடுத்திக்கொள்ளும் வாழ்கையைக் கொண்டிருக்கிறது.

இலங்கையை குருதிச் சுவடுகளால் நிரப்பிய 1980களைக் கதைக் களமாகக் கொண்ட இந்த நாவல் இலங்கையின் அனைத்து மக்கள் தரப்புகளின் துயரங்களையும் பேய்களின் உலகத்திலிருந்து சொல்கிறது. இலங்கை அரசு, ஆளுங்கட்சி - எதிர்க்கட்சித் தலைவர்கள், புலிகள், ஜேவிபி, பௌத்த பிக்குகள், ஐநா சபை, இந்தியாவின் அமைதிப்படை, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், ஆயுதத் தரகர்கள், தொண்டு நிறுவனங்கள் என்று எந்தத் தரப்பையும் ஷெஹன் இந்த நாவலில் விட்டு வைக்கவில்லை. எல்லோரது மனசாட்சியையும் குறிவைக்கும் இந்த நாவல் பேசுவது அன்பின் மொழி என்பதால் அவர் மீது யாரும் கோபம்கொள்ளவும் முடியாது.

ஆசை

அடிப்படையில் சிங்களரான ஷெஹான் தன்னுடைய கல்வியை இலங்கையிலும் பின்னர் நியுஸிலாந்திலும் முடித்தவர். லண்டன், ஆம்ஸ்டர்டாம், சிங்கப்பூரில் பணியாற்றியவர். புக்கர் பரிசு வென்ற பிறகு பேட்டிகள், நிகழ்ச்சிகள் என்று ஷெஹான் இடைவெளி இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தாலும் தனிப்பட ஷெஹான் அளித்த பேட்டியின் சுருக்கமான வடிவம் இது.



**கேள்வி:** இலங்கையிலிருந்து உங்களைப் போன்ற மிதப்போக்கு கொண்ட குரல்களைக் கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏனெனில், எந்தச் சமூகத்திலும் இதுபோன்ற குரல்கள் இன்று முக்கியத்துவத்தை இழந்துவருகின்றன. பெரும்பான்மைவாதம் சூழ்ந்த பின்னணியிலிருந்து இப்படி ஒரு பார்வையை நீங்கள் பெறுவதற்கு உங்கள் வாழ்வில் எந்த விஷயம் கருவியாக அல்லது திருப்புமுனையாக அமைந்தது?

**பதில்:** மிதப்போக்காளர்கள் நிறைய பேர் இலங்கையில் இருந்தாலும் அவர்கள் குரல் வெளியில் கேட்பதில்லை. ஏனெனில், தீவிரப் போக்கு கொண்டவர்கள், கூச்சலிடுபவர்களுக்குதான் ஒலிப்பெ

காட்டிச் சுரேஷ்பிரேமச்சந்திரன் தமது நாட்டுக்குள் நுழைய தடை விதித்திருக்கிறது கனடா. அவர் தனது மனைவி, பிள்ளைகளைப் பார்ப்பதாயின் அமெரிக்காவுக்கு வரவழைத்தோ அல்லது இந்தியாவுக்கு வரவழைத்தோதான் சந்திக்க வேண்டியுள்ளது.

**சவேந்திரசில்வாவின் பிள்ளைகளின் நிலை**

இறுதிப் போரை முன்னின்று நடத்திய படைத் தளபதிகளில் ஒருவர் சவேந்திர சில்வா. போர் முடிந்த பின்னர் பாடசாலைக்குச் சென்ற அவரது பெண் பிள்ளைகள் இருவருக்கும் உங்கள் தந்தை ஒரு கொலைகாரன் எனச் சக மாணவர்கள் கூறினார்கள். பாடசாலைக்குச் செல்ல முடியாத அளவுக்குப் பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சவேந்திரசில்வா குறிப்பிட்டார். இதேபோன்றதொரு நிலையே கனடாவில் வாழும் சுரேஷ்பிரேமச்சந்திரனின் பிள்ளைகளுக்கும் இருக்கிறது. உங்கள் அப்பா சொந்த மக்களையே கொன்ற வர் என்று அவர்களிடம் யாராவது சொன்னால் அதை மறுப்பதற்கான வல்லமை அவர்களுக்கு இருக்காது. அவர்கள் தலை நிமிர்ந்து பதிலளிக்கக் கூடிய நிலைய கனடா அரசு இது வரை வழங்க மறுத்திருக்கிறது.

போர்க்குற்ற விடயத்தில் பல நாடுகள் தாமாகவே முடிவுகளை எடுக்கின்றன. தமிழ்த் தலைவர்களோ ஆர்ப்பாட்டக்காரகளோ கூறுவதுபோல எதுவும் நடப்பதில்லை என்பதற்கு அந்த நாடுகள் இது வரை எடுத்திருக்கிற நடவடிக்கைகளே உதாரணம். போர்க் குற்றவாளிகள் என்பது இருபுறமும் கூர்முனைகளைக் கொண்ட கத்தி. அது இருபுறமும் வெட்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் அந்தக் கத்தியைத் தூக்கக்கூடாது.

ருக்கிகள் கிடைக்கின்றன, மேடைகள் கிடைக்கின்றன.

என்னை நான் இப்படியானவன், அப்படியானவன் என்று அடையாளப்படுத்திக்கொள்ள உண்மையில் விரும்ப வில்லை. ஆனால், இலங்கை எல்லா இனங்களுக்கும் மதங்களுக்கும் மொழிகளுக்கும் சொந்தமானது என்ற கருத்தை சர்ச்சைக்குரியதாக நான் நினைக்கவில்லை. இது எனக்கு மிகவும் இயல்பான, வெளிப்படையானதாகத் தோன்றுகிறது. இந்தியாவும் எல்லா இனங்கள், மதங்கள், மொழிகளுக்கும் சொந்தமானது என்பது போலத்தான் இலங்கையும். இவையெல்லாம் மனிதர்களுக்கே உரித் தான, மிகவும் இயல்பான, உலகளாவிய கருத்துகள். இவற் றைக் குழந்தைகள்கூட உள்வாங்கிக்கொள்ள முடியும்.

நான் இந்த நாவலில் சித்தரிக்கும் காலகட்டமான 1980களில் சிறுவனாக இருந்தேன். இலங்கையில் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அப்போது நாங் கள் நியூசிலாந்துக்குப் புலம்பெயர்ந்துவிட்டோம். அதன் பிறகு, புதிய சூழலில் நிறையப் படிக்கத் தொடங்கினேன். இலங்கையைப் பற்றி அதிகமாகப் படிக்கத் தொடங்கியது கொஞ்சம் தாமதமாகத்தான். அதாவது என் முப்பதுகளில் தான். அதுதான் இந்தப் புள்ளியை நோக்கி நகர்த்திய காரணி.

**கேள்வி:** உங்கள் நாவலின் நாயகன் மாலிக்கு நிறைய அடையாளங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். தமிழர், சிங்களவர், பர்கர் ஆகிய மூன்று இனங்களின் கலவை அவன். மேலும், தன்பாலின உறவாளன், போர் ஒளிப் படக்காரன், பாப் இசைக் காதலன், நாத்திகன், சூதாடி, சாத்தியங்களின் மீதும் நிகழ்தகவுகளின் மீதும் பித்துகொண் டவன். இவ்வளவு அடையாளம் இருந்தும் இறுதியில் கொத்துக்கறியாகவே மிஞ்சுகிறான். பன்முக அடையாளம் கொண்டிருந்தும் இன்று சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக் கும் இலங்கைக்கும் அவனுக்கும் நிறைய ஒற்றுமை இருக் கிறது. இலங்கையின் இந்த நிலைக்கு என்ன காரணம்? ஏன் இலங்கையில் இவ்வளவு இருள்?

**பதில்:** என்னுடைய நாவல் இதற்கு பதில் சொல்லி யிருக்கிறதா என்று தெரியவில்லை. பலருக்கும் இதில் பல கருத்துகள் இருக்கின்றன. இலங்கை ஒரு அழகிய நாடு. கொழும்பில் இப்போது நான் இருக்கும் இந்த அறை யின் கதவைத் திறந்தால் கொழும்பின் அற்புதமான பகல் பொழுது நம்மை ஆட்கொள்ளும். இலங்கை ஒரு சொர்க்க தீவுதான். ஆனாலும், இங்கே எவ்வளவு துயர இருள்!

இன்று மட்டுமல்ல, இதுவரையிலான என் வாழ்நாள் முழுவதும்.

என் கதையில் இலங்கையில் நிறைய பேய்களும் ஆவி களும் உலவுவதாக எழுதியிருப்பேன். அது எனது கற் பனை. இது உங்கள் கேள்விக்குச் சரியான பதிலா என்று தெரியவில்லை. இப்போது 2022ஐப் பார்த்தால் நிறையச் சம்பவங்கள் நடந்துவிட்டன. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது கொஞ்சம் நிலைமை நிலைத்தன்மையை அடைந்துவிட்டது. ஆனாலும், நிறைய சவால்கள் நம் முன்னே இருக்கின்றன. இலங்கை என்பது ஒளியையும் இருளையும் ஒருங்கே கொண்ட நாடு. இருள் இருந்தாலும் எங்களுக்கு எதிலிருந்தும் மீளும் தன்மை உண்டு. எந்தச் சூழ்நிலையும் எங்களை நசுக்கி விடாமல் சமாளித்துக்கொள்வோம்.

**கேள்வி:** இறப்புக்கும் மறுபிறப்புக்கும் இடையிலான பார்டோ போன்ற உலகத்தைச் சித்தரிக்கும் வகையில் ஜார்ஜ் சாண்டர்ஸ் (George Saunders) எழுதிய 'லிங்கன் இன் த பார்டோ' (Lincoln in the Bardo) நாவலுக்கு 2017இல் புக்கர் விருது கிடைத்தது. தற்போது உங்கள் நாவலும் அதே போன்றதொரு உலகத்தைச் சித்தரிக்கிறது. ஒளிப்பட இதழியர், ரஜனி திரணகம, அழகிப் போட்டியில் வென்றவர் என்று படுகொலை செய்யப்பட்ட பலரையும் இந்த உலகத்தில் உலவவிட்டிருக்கிறீர்கள். இந்த உலகம் ஒரு அரசு அலுவலகம் போன்ற பின்னணியைக் கொண் டிருக்கிறது. இப்படியொரு களத்தை நீங்கள் தேர்ந்தெடுக்க என்ன காரணம்?

**பதில்:** நீங்கள் குறிப்பிட்டதுபோல் படுகொலை செய்யப்பட்ட எல்லோரையும் பற்றி நான் நினைத்துப் பார்த்தேன். அவர்களுடன் தொடர்புகொள்வதற்கு என்ன உத்தியைப் பின்பற்றலாம் என்று யோசித்தேன். இறப் புக்குப் பிந்தைய உலகத்தைச் சித்தரிக்க இந்தச் சூழலைத் தேர்ந்தெடுத்தேன். இது உண்மையானது மட்டுமல்லாமல், வேடிக்கையானதும்கூட.

**கேள்வி:** ஒரு சுவாரசியமான விஷயம் என்னவென்றால் உங்கள் நாவலைப் படிக்கும்போது தமிழில் செயங்கொண் டார் எழுதிய 'கலிங்கத்துப்பரணி' (12-ம் நூற்றாண்டு) என்ற படைப்புடன் தொடர்புபடுத்திக்கொள்ள முடிகிறது. அந்தப் படைப்பிலும் பேய்கள் கதை சொல்வது போன்ற பகுதிகள் உண்டு. போரில் கொல்லப்பட்டவர்களின் பிணங் களைத் தின்பதற்குப் பல வகைப் பேய்கள் வரும். அதி லும் காளி வருகிறாள்; உங்கள் நாவலிலும் காளி வருகி றாள். நீங்கள் கலிங்கத்துப்பரணி பற்றி அறிந்ததுண்டா?

**பதில்:** ஓ... அப்படியா! கலிங்கத்துப்பரணி பற்றி எனக்குத் தெரியாது. ஆங்கில மொழிபெயர்ப்பு இருந்தால் நான் அவசியம் வாங்கிப் படிக்கிறேன்.

என் நாவலில் நான் சித்தரித்திருக்கும் இறப்புக்குப் பிந்தைய உலகம், பேய்கள் எல்லாம் என்னுடைய கற்ப னையில் உருவானவை. இவற்றுக்கான தாக்கத்தை நான் வெவ்வேறு மரபுகளிலிருந்து பெற்றுக்கொண்டேன்.

எனக்கு காளி ஒரு பெரும் புதிர். அவள் மீது பெரும் பித்து உண்டு. காளி பெரும்பாலும் எதிர்மறையாகவும் மூர்க்கமாகவுமே சித்தரிக்கப்படுபவள். காளியை வலு வான ஒரு பெண்ணிய பிம்பமாகக் கருதிய வாசிப்புகளை நான் படித்திருக்கிறேன். நாவலுக்காக இந்து மதத் தொன் மங்கள் தொடர்பாக நான் படித்தேன். ஆனால், என்னு டைய நாவலில் நான் உருவாக்கியிருக்கும் மகாகாளி வேறு பட்டவள்.

**கேள்வி:** இறப்புக்குப் பிந்தைய உலகில், நாவலின் இறுதிப் பகுதியில் டாக்டர் ராணீ (ரஜனி திரணகமவின் தாக்கத்தில் உருவாக்கப்பட்ட பாத்திரம் இது) நாயகன் மாலிக்கு ஐந்து வகை பானங்களைக் கொண்ட கோப்பை களைக் கொடுத்து அவற்றிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெ டுக்கச் சொல்வார். உலகத்தையே மன்னிக்கும் மனதைத் தரும் கோப்பையைப் பரிந்துரைப்பார். அந்தக் கணத்தில் எனக்கு ஏசுவையும் காந்தியையும் ராணீ நினைவுபடுத் தினார். மிகவும் அற்புதமான கணம் அது. ஆனால், மாலி ஏன் வேறு கோப்பையை, அதாவது அவன் எங்கு போக விரும்புகிறானோ அங்கே கொண்டுசெல்லும் கோப்பை யைத் தேர்ந்தெடுக்கிறான். அதை ஏன் அவன் தேர்ந்தெ டுத்தான்?

**பதில்:** இதை நான் வாசகர்கள் முடிவுக்கே விட்டுவிடு கிறேன். அந்தக் கணம் ரொம்பவும் இயல்பாக எனக்கு

வந்த ஒன்று. அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பானங்கள் எல்லாம் எனக்கு ரொம்பவும் பிடித்தவை. எனக்குத் தேநீர் பிடிக்கும், போர்ட்டெல்லோ பிடிக்கும். ஒருவேளை மாலி தான் மன்னிக்கப்பட்டதாகவோ தனது கதை முடிந்துவிட்டதாகவோ நினைத்து அந்தக் கோப்பையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். என்ன வேண்டுமானாலும் விளக்கங்கள் கொடுத்துக்கொள்ளலாம். ஆனால், அந்தக் கோப்பைகள் அனைத்தும் முக்கியமானவை.

**கேள்வி:** ராஜபக்ச ஒரு மனித உரிமைச் செயல்பாட்டாளர் என்ற குறிப்பு ஒரு இடத்தில் வருகிறது. கடந்த காலத்தில் அது ஓர் உண்மையும்கூட. ஆனால், நாவலில் அதை நீங்கள் பொருத்தியிருக்கும் இடம் புத்திசாலித்தனமானது. அமைச்சருக்கு அவரது பாதுகாவலரின் ஆவி இன்னும் பாதுகாவலராக இருப்பது நான் ரசித்த விஷயங்களுள் ஒன்று. இறப்புக்குப் பிறகும் அவரது அடிமைத்தனம் தொடர்கிறது. இந்தப் பாத்திரத்தை நீங்கள் தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம்?

**பதில்:** ராஜபக்ச ஒரு மனித உரிமைச் செயல்பாட்டாளராக இருந்தார் என்பது என் கற்பனை அல்ல. 1980களில் அவரது இளமைப் பருவத்தில், எதிர்க் கட்சித் தலைவர்களுள் ஒருவராக இருந்தபோது அவர் அப்படித்தான் இருந்தார். எங்கள் நாட்டிலோ உலகெங்கிலுமோ பல விஷயங்கள் நல்ல நோக்கத்துக்காகத்தான் தொடங்கப்பட்டன என்று எனக்குத் தோன்றியது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் எடுக்க ஒரு அடிப்படை நோக்கம் இருந்தது. எல்லாம் அகிம்சையில் தொடங்கி வன்முறையில் முடிகின்றன. ஏன் இப்படி நடக்கிறது என்று எண்ணிப் பார்க்க முயல்கிறேன். ஜேவிபியும் அப்படித்தான். ஏழை மக்களுக்கு உதவுவதற்குத்தான் அந்த இயக்கத்தைத் தொடங்கினார்கள். பிறகு விஷயங்கள் அவர்கள் கைகளை மீறிப் போய்விட்டது.

அப்புறம், அமைச்சரின் பாதுகாவலர் பாத்திரம் எனக்கு ரொம்பவும் சுவாரசியமான ஒன்றாகத் தோன்றியது. நீங்கள் அரசியல் படுகொலைகள் பலவற்றையும் பற்றி எண்ணிப் பாருங்கள். பாதுகாவலர்களும் தாங்கள் யாரைப் பாதுகாத்துக்கொண்டிருந்தார்களோ அவர்களுக்காக உயிர்த் தியாகம் செய்திருப்பார்கள். அவர்களுக்குத் தங்கள் தலைவர் நல்லவரா கெட்டவரா என்று தெரியாது. பாதுகாவலருடைய உயிரும் மதிப்பு மிக்கதுதான் இல்லையா? படுகொலை செய்யப்படுபவர் அதிபர், இவர் பாதுகாவலர் என்பதால் உயிரின் மதிப்பில் ஏதும் வேறுபாடு இருக்கிறதா என்ன? அவர்களுடைய பெயர்கள்கூட நமக்குத் தெரியாது. ராஜீவ் காந்தி படுகொலையின்போது அவருடைய பாதுகாவலர்களும் கொல்லப்பட்டார்கள் என்றுதான் சொல்வோமே தவிர அவர்களின் பெயர் நமக்குத் தெரியாது. அவர்களைப் பற்றி நாம் பேசுவதில்லை. ஏதோ அவர்களின் உயிர் முக்கியத்துவம் அற்றது என்பதைப் போல. ஆனால், அவர்களின் குடும்பத்துக்கு அவர்களின் உயிர் முக்கியமானது.

நான் இதுபோன்ற விஷயங்கள் குறித்து எப்போதும் ஆய்வு செய்ய முயல்வது உண்டு. அதன் அடிப்படையில் பாதுகாவலர் பாத்திரத்தை உருவாக்கினேன்.

நீங்கள் ஒரு எழுத்தாளராகவோ இதழியராகவோ இருந்தால் உங்கள் பணியைச் சிறப்பாகச் செய்துமுடிக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். ஒரு பாதுகாவலருக்கு ஒரு முக்கியமான நபரைப் பாதுகாப்பதுதான் பணி. இந்த நாவலில் வரும் பாதுகாவலர் அதில் தோற்றுவிடுகிறார். அவரை ஒரு நல்ல மனிதர் என்றோ கெட்ட மனிதர் என்றோ நீங்கள் வரையறுத்துவிட முடியாது. தனது வேலையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று நினைப்பவர் அவ்வளவுதான்.

**கேள்வி:** இலங்கை தேசியத்தை அதன் தொன்மத்தைப் பற்றி விவாதிப்பதன் வழியே கேள்விக்குள்ளாக்குகிறீர்கள் அல்லவா? அரசுகளை, ஆட்சியாளர்களை விமர்சிப்பதுகூட சாத்தியம் ஆனால் தேசியத்தை விமர்சிப்பது மிகவும் கடினம். எங்கிலும் மூர்க்கமான தேசியம் பலம்பெற்று வரும் காலத்தில் இதை நான் முக்கியமானதாகக் கருதுகிறேன். எப்படி இதைச் செய்தீர்கள்?

**பதில்:** இதை நான் சொல்வதற்காக என்னைத் தாக்குவார்கள். ஆனாலும், என்னுடைய மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தக் கருத்தாக்கம் - அதாவது பெரும்பான்மைவாதம், வெற்றி பெறவில்லை, அதனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்றுதான் சொல்வேன்.

பெரும்பான்மைவாதத்தை நிலைநாட்டுவதற்கு நாங்கள் முயன்று பார்த்துவிட்டோம். 1950களில் முயன்றோம், 1960களில் முயன்றோம், 1970களில், 1980களில் முயன்றோம். இப்போதுகூட முயன்றுகொண்டிருக்கிறோம் என்று கூறலாம். ஆனால், அதனால் எந்தப் பலனும் இல்லை. ஏனெனில், இலங்கை என்பது முழுவதும் இலங்கையர்களால் ஆனது. அவர்கள் அனைவரும் மனிதர்கள். சிலர் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுபவர்கள், சிலர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள், பெரும்பான்மையினர் புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள். மொழியிலும் அப்படித்தான். தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகள் பேசப்படுகின்றன.

இலங்கை இந்த இனத்துக்கு மட்டும்தான், இந்த மொழிக்கு மட்டும்தான் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், இந்த அணுகுமுறை வெற்றி அடையவில்லை. நான் சொல்வதெல்லாம் இதைத்தான். எது பலனளிக்கிறதோ, எது வெற்றி தருகிறதோ அந்த அணுகுமுறையைப் பின்பற்றுங்கள்.

நான் சிங்கப்பூரில் இருந்திருக்கிறேன். அங்கே, இந்தியர்கள், சீனர்கள், மலேசியர்கள் என்று பலரும் இருக்கிறார்கள், பல மொழிகளும் பேசப்படுகின்றன. ஒரே கட்டடத்தில் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வசிக்கிறார்கள். அதுதான் சிங்கப்பூரின் இயல்பான, அடிப்படையான அமைப்பு. சிங்கப்பூரின் முக்கிய நோக்கம் அங்கே தொழில், வணிகம் நன்றாகவும் முறையாகவும் நடைபெற வேண்டும் என்பதே. அதற்காகத்தான் அவர்கள் அறியப்படுகிறார்கள். இந்த நல்லிணக்கம் குலைந்தால் தொழில் வளர்ச்சியும் குலைந்துவிடும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, நல்லிணக்கம் சீரழிக்கப்படுவதை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

கிரிக்கெட்டைப் பாருங்கள். இலங்கை கிரிக்கெட் அணியில் முத்தையா முரளிதரனைக் கொண்டுவந்தது எவ்வளவு மிகுந்த பலனை அந்த அணிக்கு அளித்தது. அதுவும் போர் உச்சத்தில் இருந்த சமயத்தில். அது போன்ற முயற்சிகள், எண்ணங்கள் வெற்றி அடைந்திருக்கின்றன. ஆகவே, இலங்கைக்கு எது நன்மையும் வெற்றியும் தருமோ அதைச் செய்வோமே. இதைத்தான் நான் வலியுறுத்துகிறேன்!

நன்றி: அருஞ்சொல்

# கைதிகளின் பிரதிநிதிகள் கருத்துக்கூற வாய்ப்பில்லை



85

சிறைக்குள்...

தர்மராசா

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்கொன்றைத் தாக்கல் செய்யும்போது சாட்சிகளின்றி வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது என்று அரசியல் தலைவர்களைவிட கைதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தது. இந்த நிலையில் செல்வம் அடைக்கலநாதனின் கூற்றுப்படி தம் மீதான ஒரு வழக்குக்கூடத் திரும்பப்பெறப்படப் போவதில்லை என்று கைதிகளுக்கு விளங்கியது. நீண்டகாலமாக நீதிமன்றங்களுக்கு வராமலிருந்த சாட்சியாளர்களான காவல்துறையினர் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாண நீதிமன்றங்கள் வரை சென்று சாட்சி சொல்லி வந்தனர். அந்தக் காலச் சூழலில் சாட்சிகள் சமூகமளிக்காத வழக்கு ஒன்றுகூட இருக்கவில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகத் தலைமை அமைச்சர், சட்டமா அதிபர், பன்னாட்டு அமைப்புகள், நீதியமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் எனப் பலர் கூடி ஆராய்ந்தனர். கைதிகள் சார்பாக எவரையாவது அழைத்து கைதிகளின் கருத்துகளையும் கேட்டறியவேண்டும் என்று மேற்படித் தரப்புகள் சிந்திக்கவேயில்லை. இதனால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அமைச்சர்கள் மட்டத்தில் கைதிகளின் விடுதலை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஏதாவது சாட்டுப்போக்குச் சொல்லிக் காலத்தை இழுத்தடிக்கும் வாய்ப்புகள் தொடர்ந்து நடந்தன.

கைதிகளின் உண்மை நிலைமையோ, பிரச்சினையோ அரசியல்வாதிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. சிறை ஊழியர்களின் பாதுகாப்புடன் கைதிகளின் பிரதிநிதிகளை அவ்வாறான கலந்துரையாடலுக்கு அழைத்துச் செல்வது சிரமம் என்றால் அரசியல் கைதிகள் அதிகமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள களுத்துறைச் சிறைச்சாலைக்குள் இத்தகைய கலந்துரையாடல்களை நடத்திக் கைதிகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டிருக்க முடியும். ஆனால் இலங்கை அரசின் நோக்கம் தமிழ் அரசியல் கைதிகளைத் தண்டித்தாகவேண்டும் என்பதாகவும்,

# பிரபாகரனின் அழைப்பு...!

மொழியாக்கம்
கமலநாதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்த் தந்தைக்கும் நித்தம்புவ பகுதியைச் சேர்ந்த தாய்க்கும் மகனாகப் பிறந்தவர் நடராஜா மகேந்திரராஜா. தனது ஆரம்பக் கல்வியை நித்தம்புவ புனித அந்தோனியார் கல்லூரியிலும் 8, 9ஆம் தரங்களைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் பின்னர் நித்தம்புவவிலும் கற்றவர். 1976இல் தனது 21ஆவது வயதில் இலங்கைக் கடற்படையின் தொலைத் தொடர்புப் பிரிவில் வேலைக்குச் சேர்ந்தார். திருகோணமலை, கொழும்பு, புத்தளம் - கற்பிட்டி கடற்படை முகாம்களிலும், கடற்படைக் கப்பல்களிலும் தகவல் அறியும் மையங்களிலும் பணியாற்றினார். புலிகளின் சங்கேத உரையாடல்களை ஒட்டுக்கேட்டு அவற்றின் உள்ளார்ந்தத்தைக் கடற்படைத் தலைமையகத்துக்கு உடனுக்குடன் அனுப்பியவர். இவர் தனது அனுபவங்களை வனச யூரியூப் தளம் பதிவு செய்திருந்தது. அதன் முதல் பாகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெளியாகி இருந்தது. மீதி இந்த வாரம் வெளியாகின்றது.

பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலி இருந்த போது ஜே.ஓ.சி. எனப்படும் ஜொயின்ற் ஒப்பிரேசன் கொமாண்ட் என்ற இணைப்பு அலுவலகம் ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயக்கினார்கள். அமைச்சர் அந்த அலுவலகத்துக்குச் செல்லும் போதெல்லாம் முதலில் ஜெலசாஹர தகவல் ஏதாவது உண்டா? என்று கேட்பாராம். நீர்ச் சமுத்திரத் தகவல் ஏதாவது உண்டா என்பதே அதன் அர்த்தம். எனது தகவல் ஏதாவது உண்டா என்பதைத்தான் அப்படிக் கேட்டு அறிவாராம். எனது தகவல் துல்லியமானதாகவும் சரியானதாகவம் இருக்கும் என்பதே அவரது எதிர்பார்ப்பு.



புலிகள் சங்கேத மொழிகளில் பேசும்போது, "150 மாம்பழங்களை இந்த இடத்துக்கு அனுப்பு" என்று கூறுவார்கள். அவர்கள் கேட்பது ஒருவகைக் குண்டுகள் என்று எமக்குத் தெரியும். ஆனால் குறிப்பிடும் இடம் எங்கிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது சிரமமானது.

**பிரபாகரனின் அழைப்பு**

2 கருவிகளைப் பயன்படுத்திப் புலிகள் கதைக்கும்போது சாதாரணமாக மச்சான் போட்டுக் கதைப்பார்கள். ஆனால் அழைப்பில் பிரபாகரன் வரும்போது அமைதியாக அவர் சொல்வதைச் செவிமடுப்பார்கள். மிகவும் மரியாதையுடன் பதிலளிப்பார்கள். "முகுந்தனிடம் சொல்லுங்கள் அவரைத் தொடர்ந்தும் வைத்திருக்க மாட்டேன்" என்று ஒரு தடவை பிரபாகரன் சொன்னார். பின்னர்தான் தெரிந்தது முகுந்தன் என்பது உமாமகேஸ்வரன் என்று. பின்னாளில் அவர் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டார்.

தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தவேண்டும் என்பதாகவும் புலிச் சந்தேகநபர்களை கெட்டவர்களாகக் காட்ட முற்படுவதுமாகவே இருந்தது. இவையே மேற்படி விடயங்கள் பற்றிச் சிந்திக்காது தடுத்த முக்கிய தடைகள் எனலாம்.

நான் சிறைக்குள் அடைக்கப்படுவதற்குச் சில காலங்களுக்கு முன்னர் அப்பன், ஜெயபால் ஆகிய இரண்டு கைதிகள் 2001ஆம் ஆண்டில் தமது விடுதலைகோரிச் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றைத் தொடங்கினார்களாம். இவர்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. தமது போராட்டம் பற்றிச் சிறை நிர்வாகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துவிட்டு 'எவ்' வார்ட்டில் இருந்த கோவிலில் தமது கோரிக்கைகளைப் பதாதைகளாக எழுதித் தொங்கவிட்டு போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு மணி நேரத்தில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி சிறைச்சாலை அலுவலகத்துக்கு வந்திருக்கிறார் என்று சொல்லி அங்கு வந்த சிறை ஊழியர்கள் இருவரையும் அழைத்துச் சென்றார்கள். சற்றுநேரத்தின் பின் கால் றாத்தல் பாண் துண்டுகளுடன் இருவரும் வந்தார்கள். விவரம் கேட்ட போது, "விநாயகமூர்த்தியர் தான் விரைவில் விடுதலைக்கான ஏற்பாடுகளைச் செய்வேன், நீங்கள் போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று கூறி தண்ணீர் தந்து போராட்டத்தை முடித்து வைத்தார்" என்றார்களாம். நான் நினைக்கிறேன் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களிலேயே மிகக் குறைந்த நேரத்தில் முடித்து வைக்கப்பட்டது என இதையே குறிப்பிடலாம் என்று. இந்த போராட்டம் பற்றிக் கைதிகள் அவ்வப்போது கிண்டலடித்துக் கொள்வதும் பழக்கமாகியிருந்தது. (தொடரும்)

## அழைப்பில் பிரபாகரன் வரும் போது அமைதியாக அவர் சொல்வதைச் செவிமடுப்பார்கள். மிகவும் மரியாதையுடன் பதிலளிப்பார்கள்

ஏதாவது விடயத்தில் பிரபாகரன் கூறுவதைச் சரிவரச் செய்யாதுவிட்டால் அது பற்றிக் கதைக்கும்போது அவரைப் போடு என்று கூறுவதையும் கேட்டிருக்கிறேன்.

புலிகளின் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த இருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் பலாலிப் பகுதியில் காயமடைந்தது பற்றி அவர்களது தொலைத் தொடர்புக் கருவியில் கதைத்தார்கள். காயமடைந்தவர்களில் ஒருவரின் பெயர் மஜீத் என்றும் அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் உரையாடல் மூலம் அறிந்தேன். இதை நான் மேலிடத்துக்கு அறிவித்ததும் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்குச் சிவில் உடையில் படைப் புலனாய்வாளர்கள் சென்றனர். அந்தச் சம்பவம் உண்மை என்று உறுதிப்படுத்தினர். ஆனால், படையினர் அங்கு செல்ல அரை மணி நேரத்துக்கு முன்னரே அங்கிருந்த புலி உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். அதன் பின்னர் அவ்வாறான செய்திகளைத் தகவலர் தொடர்பு கருவி மூலம் அறிவிப்பதைத் தவிர்த்தார்கள்.

**புலிகள் எனக்கு வலை விரித்தார்கள்**

எனது அக்கா திருகோணமலையில் இருந்தார். மச்சான் தொடருந்துத் திணைக்களத்தில் பணி புரிந்தார். தொடருந்து நிலையச் சிற்றுண்டிச் சாலைக்கு நானும் போவதுண்டு. அங்கு பலரும் வருவது வழக்கம். புலிகள் என்னைக் காண்பதற்காக அங்கு வந்ததை அறிந்தேன். யாராவது என்னை விசாரித்தால் அப்படி ஒருவர் இருக்கிறார் ஆனால் அவருக்கும் எங்களுக்கும் முரண்பாடு இருப்பதால் அவருடன் எங்களுக்கு உறவு இல்லை என்று கூறும்படி அக்காவுக்குச் சொல்லி வைத்தேன்.



புலிகள் ஒரு தடவை அக்காவின் வீடு தேடிப் போயிருக்கிறார்கள். மருமகன் ரீயுசனுக்குப் போய் வீடு திரும்பியபோது அறிமுகமில்லாத இருவர் அவனை மறித்து என்னைப் பற்றி விசாரித்துள்ளார்கள். நான் கூறி வைத்தவாறே அவனும் கூறியுள்ளான். அவரோட நாங்கள் கோவம் என்றுள்ளான். உங்கள் மாமாவை எங்களுக்கு உதவச் சொல்லுமாறு அவனிடம் புலிகள் கேட்டார்களாம்.


**கொச்சிக்கடை ரங்கல கடற்படை முகாமுக்கு மாற்றம்**

அவசியமான வேலைகள் சிலவற்றுக்காக என்னைக் கொழும்பு - கொச்சிக்கடை ரங்கல கடற்படை முகாமுக்கு மாற்றினார்கள். நான் அங்கு கடமையாற்றியபோது தபாலட்டை ஒன்று வந்தது. அதில் யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியின் அதிபர் நினைவுதினம் நடக்கவிருக்கிறது என்று யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பில் தகவல் அனுப்பப்பட்டிருந்தது. நான் 2வருடங்கள் மாத்திரமே அங்கு கல்வி கற்றேன். என்னை யாருக்கும் ஞாபகமிருக்க வாய்ப்பில்லை. அந்த நிகழ்வைக் காரணம் காட்டி என்னைச் சுடும் ஏற்பாடு அது என்பதைப் புரிந்து கொண்டேன்.

அந்தத் தபால் அட்டையை எனக்குப் பொறுப்பாக இருந்த கடற்படை அதிகாரி கருணா கொடவிடம் காட்டினேன். அவர் கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்கு அதை அனுப்பி தபாலட்டையில் குறிக்கப்பட்டிருந்த முகவரியைத் தேடியபோது அது வெள்ளவத்தையிலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திலிருந்து அனுப்பப்பட்டது என்று தெரிய வந்தது. அந்தத் தேவாலயத்துக்குப் பொறுப்பான பாதிரியாரிடம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வு பற்றி விசாரித்தபோது அப்படி ஒரு நிகழ்வு அங்கே ஏற்பாடு செய்யவில்லை என்று சொன்னார். பின்னர் அந்த விட யம் பற்றி குறிப்பிட்ட தினத்தில் சிவில் உடையில் கடற்படையினரை அனுப்பி சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. நான் அவ்வாறு செய்யவேண்டாம் எனக்குப் பயமாக இருக்கிறது என்று கூறியதால் அது கைவிடப்பட்டது. கடற்படையில் 12 வருடங்கள் பணி புரிந்தேன். ஓமான் கடற்படையில் சேர்ந்து 5 வருடங்கள் பணிபுரிந்தேன்.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.




**மு.திருநாவுக்கரசு**

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

ஆசியாவில் நிறை அரசுகளும் சிற்றரசுகளும் சமஷ்டி அலகுக்கு இருக்கக் கூடிய குறைந்தபட்ச அம்சங்களைக் கொண்டிருந்தன. திறை அரசுமுறை, சிற்றரசுமுறை என்பவற்றுக்கு மாறாகப் பேரரசின் நேரடி ஆளுநர் ஆட்சிமுறை தென்னாசியாவில் முதல்முறையாக ஆட்சிக்கு வந்தது சோழப்பேரரசின் மண்டல ஆட்சிமுறையோடுதான். பிற்காலத்தில் பிரித்தானியர் காலணித்துவ ஆதிக்கம் பற்றிய மகாதேசாதிபதி (GOVERNOR -GENERAL), ஆளுநர்(GOVERNOR); வைஸ்றோய்(VCEROY) போன்ற முறைகளை இது ஒத்திருந்தது. இந்த மண்டல முறையில் பிரதேச சுயபண்பாட்டு அம்சங்கள் பேணப்பட்டாலும் சுயாட்சி முறைக்கு மாறாகப் பேரரசு ஆட்சிமுறைதான் பேணப்படும். எவ்வாறாயினும் சமஷ்டி அலகு கள் பற்றிய சில அம்சங்கள் தென்னாசியப் பிராந்திய பண்டைய அரசியலில் இருந்துள்ளபோதிலும் நாம் இப்போது ஆராயும் சமஷ்டி முறையானது முற்றி லும் மேற்குத்தேச முறைமைகளுக்கூடாகச் சிந்திக்கப்படுவதாகும்.

இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கத்தின் கீழ் 1815ஆம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கை மூலம் முதன்முறையாகச் சமஷ்டி முறைக்குரிய முக்கிய இயல் புகளில் ஒன்றான பிரதேச சுயாட்சி முறையின் சில பிரதான அம்சங்கள் உருவா கியிருந்தன. உடன்படிக்கையின் நான்காம், ஐந்தாம், எட்டாம், பதினோராம் பகுதிகளில் சுயாட்சிக்குரிய சில அம்சங்கள் இருப்பதைக் காணலாம். இக்கண்டி உடன்படிக்கை சிறப்பான முறையில் வளர்வதற்குப் பதிலாக 1818ஆம் ஆண்டு டன் முறிந்துபோய்விட்டது. சமஷ்டிமுறை இலங்கையில் ஓர் இயல்பான

வளர்ச்சிக்குப் போகமுடியாது முறிக்கப்பட்டமையானது இலங்கை வரலாற்றில் ஒரு துரதிஷ்டவசமான அரசியல் வரலாற்றுத் தொடக்கமாய் அமைந்தது. இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறை அமையவேண்டும் என்ற கருத்தை முதன்முறையாக ஆளுநர் மன்னிங் 1920ஆம் ஆண்டு தெரிவித்ததாக ரஞ்சித் ஆனந்த ஜெயசிங்க எடுத்துக்கூறுகிறார். அத்துடன் கண்டிச் சிங்களத் தலைவர்களை சமஷ்டிக் கோரிக்கையின்பால் அவர் தூண்டினார் என்றும் கூறுகின்றனர்.

இத்தகவலை அடிப்படையாகக் கொண்டு ஒரு மதிப் பீட்டைச் செய்யலாம். இலங்கையில் பிரித்தாளும் தந்தி ரத்தைப் பெரிதும் பின்பற்றுவதில் அதிக அக்கறை காட் டியவர்களுள் ஒருவர் ஆளுநர் வில்லியம் மன்னிங் (1918-1925) இலங்கைத் தீவுக்குள் நின்று அரசியல் பரிபாலனத்தைப் பற்றி யோசித்தபோது கரையோரச் சிங்களவரையும் கண்டிச் சிங்களவரையும் பிரித்தாள்வது ஒரு பயனுள்ள முறையாகப் பிரித்தானியருக்கிருந்தது. ஆனால், இந்தியாவுடன் இலங்கையை இணைத்துப்பார்த்த போது சிங்கள இனம் பலவீனப்படுவது பிரித்தானிய ருக்குப் பாதகமாய்த் தோன்றியது. டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வந்த காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர் இதில் இரண்டாவதான கருத்திற்கு வந்துவிட்டனர்.

கண்டிச் சிங்களவரையும் கரையோரச் சிங்களவரையும் பிரித்தாளவேண்டும் என்ற நோக்கில் சமஷ்டி பற்றிய கருத்தோட்டம் பிரித்தானிய ஆட்சியாளரிடம் தோன்றி யது. சமஷ்டிக்கான கோரிக்கையை மன்னிங் கண்டிச் சிங்களவர்களிடம்தான் எடுத்துக்கூறினார் என்பது கவனிக்கத்தக்கது. சிங்களவர்களைப் பிரித்தாள்வதற்காகச் சமஷ்டி பற்றிய கோரிக்கையைத் தூண்டிய அதே பிரித்தானியர் பின்பு இந்தியா பற்றிய தமது நோக்கு நிலைக்காக, சிங்கள இனக்கூறுகள் இரண்டையும் ஒன்றிணைந்து இந்தியாவுக்கு எதிராக அவர்களைத் தம்பக்கம் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக மன்னிங் காலத்தின் பின் சமஷ்டிப் போக்கிலிருந்து விலகிச் சென்றனர். இதன்பொருட்டு ஒற்றை ஆட்சிமுறையை அதிகம் பலப்படுத்தவும், இலங்கைத் தீவில் சிங்கள அரசியலாதிக்கத்தை வலுப்படுத்தவும் வகைசெய்யவல்ல டொனமூர் யாப்பை உருவாக்கினர்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும் பியிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்காவிடம் அப்போது காலணித்துவ எதிர்ப்பும், முற்போக்குச் சிந்தனைகளும் தீவு தழுவிய தேசியக் கண்ணோட்டமும் இருந்தன. இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மாணவராயிருந்த காலத்தில் வெள்ளை மேலாதிக்கப் போக்கினால் அங்கு பாதிக்கப்பட்டவராயும் இருந்தார். இதனைப் பற்றிப் பண்டாரநாயக்கா அவ்வப்போது கூறியுமுள் ளார்.

இதன் பின்னணியில் பண்டாரநாயக்கா இலங்கையின் இன உறவு சார்ந்த அரசியலைப் பெரிதும் அறிவார்ந்த கண்கொண்டு பார்ப்பவராயிருந்தார். ஒக்ஸ்போட் பல்க லைக்கழகத்திலிருந்து பண்டாரநாயக்கா நாடு திரும்பி யதும் 1925ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆற்றிய விரிவுரையில் ஒற்றையாட்சி முறை ஓரினத் தன்மை கொண்ட நாட்டுக்குத்தான் பய னுள்ளதென்றும் பல்லினத் தன்மை கொண்ட இலங்கைபோன்ற நாட்டுக்கு ஒற்றையாட்சி முறை பொருத்தமற்றதென்றும் இத்தகைய பழைய ஒற்றையாட்சி முறையிலிருந்து அர்த்தபுஷ்டியுள்ள அதிகாரப் பகிர்வு முறைக்கான புரட்சிகரமான சமஷ்டி மாற்றத்துக்குப்போகவேண்டும் என்றும் வாதிட்டார். இதன்பொருட்டு ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளிடமிருந்து படிப்பினைகளைப்பெறவேண்டு மென்றும் தனது விரிவுரையின்போது பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இதற்கு அடுத்த ஆண்டு 1926 ஜூலை மாதம் யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் கூட்டத்தில் "பொது அரசியற் பிரச்சினைக்கு சமஷ்டிமுறைதான் ஒரே தீர்வு" என்ற தலைப்பில் பண்டாரநாயக்கா உரையாற்றினார். "சமஷ்டி முறைக்கு எதிராக எதிர்ப்புக்கள் எழலாம். ஆனால், இறுதியில் அவ்வெதிர்ப்புகள் உதிரும்போது ஏதோவொருவகைச் சமஷ்டி முறைதான் ஒரே தீர்வு என்ற நிலை தோன்றும்" என்று அவர் தனது உரையில் அங்கு தெரிவித்தார். பிரித்தானியர் தமது நோக்கின் அடிப்படையில் இலங்கையை இந்தியாவுடன் பொருத்தி நோக்கியதன் பிரகாரம் இன, மொழி அடிப்படைகளிலான ஒரு சமஷ்டி முறைக்கு இலங்கையில் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தனர்.

(மிகுதி அடுத்த வாரம்)




# ஆணைக்குழுக்கள் அவசியமற்றவை...

அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்திருந்த அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடமாகாணத்தில் உள்ள காணிப் பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைப்பேன் என்றும் அதற்காக 8 ஆணைக்குழுக்களை அமைக்கவுள்ளேன் என்றும் சொன்னார். பிரச்சினையை அதன் மையப்புள்ளிக்குப் போகவிடாது தடுப்பதற்கும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதற்குமே இந்த ஆணைக்குழுக்கள் உதவுகின்றன. இதுவரை காலமும் இலங்கையில் இவ்வாறான ஆணைக்குழுக்கள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைக்குழுக்கள் எந்தவொரு பிரச்சினையையும் தீர்த்து வைக்கவில்லை.

இந்த நிலையில் காணிப்பிரச்சினைக்கும் ஆணைக்குழு அமைக்கவுள்ளேன் என்கிறார் ரணில். இருக்கின்ற பிரச்சினையை இலகுவாகத் தீர்க்காது வேறு பல தரப்பினரையும் உள்ளே இழுத்து அந்தப் பிரச்சினையைப் பல வழிகளில் சிக்கலானதாக ஆக்கவே இந்த ஆணைக்குழுக்கள் உதவுகின்றன. உதாரணத்துக்குச் சொல்வதானால், மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவர் விபத்துக்குள்ளாகி இருவருக்கும் சிறு சேதங்கள் ஏற்பட்டு விட்டன. அவர்கள் தமக்குள் கதைத்து முடிவு எடுக்க முற்படுகிறார்கள். சிறிது நேரத்தில் விபத்து நடந்த இடத்துக்குப் பலர் வருகிறார்கள் (அந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் காணாதவர்கள்). விபத்துக்குள்ளான இருவரில் யாராவது ஒருவருக்குத் தெரிந்த பலர் அவ்விடத்துக்கு வந்து விட்டால் விபத்துக்குள்ளான மற்றையவரே பாதிக்கப்படுவார். அதிகம்பேரைத் தரப்பாகக் கொண்டவரே விபத்துக்கு முக்கிய காரணமாக இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால், அவரை நிரபராதியாக்கி மற்றவரிடம் பணம் பிடுங்குவதும் இல்லாவிட்டால் காவல்துறைக்கு அறிவிக்கப் போகிறோம் என மிரட்டுவதும் நடக்கும். இதைப் போன்ற செயலே இந்த ஆணைக்குழுக்கள் விவகாரமும்.

**சத்தியநாதன்**



**ஆணைக்குழுக்களில் ஏன் அரசுக்கு அக்கறை...?**

வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள காணிப் பிரச்சினையை மாவட்ட செயலர், பிரதேச செயலர்கள் மட்டத்திலேயே இலகுவாகத் தீர்க்க வழியிருக்கிறது. அவ்வாறு வழியிருந்தும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைவரிடமும் அபிப்பிராயம் கேட்டு அதன்படி 8 ஆணைக் குழுக்களது ஆலோசனைகளையும் கேட்டுத் தீர்வு காண வேண்டும் என்று ரணில் நினைப்பது விடயத்தை மேலும் சிக்கலாக்கும். ஏற்கனவே நிரந்தரமாகவுள்ள அரச



சமையல் சமையல்

# கீரை வடை



வடை என்பது பிரபல சிற்றுண்டி. இதனால்தான் தேநீரும் வடையும் சேர்ந்த விற்பனை நம்மூர்ச் சிற்றுண்டிச் சாலைகளில் இன்றும் கொடி கட்டிப் பறக்கிறது. கடலை வடை, உழுந்து வடைகளுக்கு மத்தியில் கீரை வடை சற்று வித்தியாசமானது. கடலை வடை, உழுந்து வடைகளை அன்றாடம் செய்யும் பழக்கத்தைக் கொண்ட நம்மவர்கள் கீரை வடை தயாரிப்பது அரிது. கடைகளிலும் கீரை வடை விற்பனை குறைவு. மற்றைய இரண்டு வடைகளுடன் ஒப்பிடுகையில் ருசியும், ஊட்டமும் நிறைந்த கீரை வடையைச் செய்வது எப்படி என்று இந்த வாரம் பார்ப்போம். உழுத்தம் பருப்பு மற்றும் கடலைப் பருப்புகளின் சேர்க்கையோடு கீரை வடையைத் தயாரித்துண்போம் வாருங்கள்.

**தேவையான பொருள்கள்**

கீரை - நறுக்கிய நிலையில் அரைக் கப், உழுத்தம் பருப்பு, கடலைப் பருப்புகள் - தலா அரைக்கப், இஞ்சி - ஒரு துண்டு, செத்தல் மிளகாய்கள் - 6, சீரகம் - ஒரு தேக்கரண்டி, வெங்காயம் - 2, உப்பு - சுவைக்குத் தேவையான அளவு, தேங்காய் எண்ணெய் - பொரித்தெடுப்பதற்குத் தேவையான அளவு.

**எப்படிச் செய்வது...?**

முதலில் உழுத்தம் பருப்பு அல்லது கடலைப் பருப்பை நன்றாக ஊறவைக்க வேண்டும். ஊறியதும் இரண்டையும் சேர்த்து அரைத்துக்கொள்ளவேண்டும். இதனுடன் செத்தல் மிளகாய்கள், உப்பு, இஞ்சி, சீரகம் ஆகியவற்றைச் சேர்த்துச் சிறிதளவில் நீர் ஊற்றி அரைத்துக்கொள்ளவேண்டும். கீரை, வெங்காயத்தை நறுக்கி வைத்திருக்கவேண்டும். அரைத்த கலவையுடன் நறுக்கிய கீரை, வெங்காயத்தைப் போட்டு நன்கு கலந்துகொள்ளவேண்டும். பின்னர் அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் விட்டு அது கொதித்ததும் வடை சுடுவதைப்போல அளவாகக் கலவையை எடுத்துப் பொரித்தெடுக்கவேண்டும். உழுந்தம் பருப்பு, கடலைப் பருப்புடன் சேர்ந்து பொரிந்த கீரையின் சுவை தனித்துத் தெரிவதை இந்தக் கீரை வடையில் உணரலாம்.

கட்டமைப்புகள் ஊடாகப் பிரச்சினைகளை அனுகாமல் ஆணைக்குழுக்களைத் தமக்கு ஏற்றவாறு அமைத்து அவற்றைத் தமக்கு ஏற்றவாறு செயற்படுத்துவதற்கே ஆட்சிக்கு வருபவர்கள் அக்கறை காட்டுகின்றனர். அவர்களது ஆட்சி விலகியதும் அவர்கள் தோற்றுவித்த ஆணைக்குழுக்களும் காணாமல் போய்விடுகின்றன. அல்லது தமக்கு ஏற்றவாறு ஆணைக்குழுவின் தலைமையை நியமித்து தமக்கு விருப்பப்படியான முடிவுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனாலேயே ஆட்சிக்கு வருபவர்கள் அனைவரும் ஆணைக்குழுக்களை அமைப்பதில் அக்கறை காட்டுகின்றனர்.

**சிங்களவருக்கும் பங்கு**

வடமாகாணத்தில் குறைந்த தொகையில் வாழும் சிங்களவரையும் ஒரு தரப்பாக அரசதலைவர் முன்மொழிந்திருப்பது மேலும் சிங்களவர்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்கவும் குருந்தூர் மலைத் தாது கோபுரம் போன்றவற்றை மேலும் அமைக்கவுமே வழிவகுக்கும். இலங்கையில் மட்டுமல்லாது வேறெந்த நாடுகளிலும் அந்த நாட்டின் பெரும்பான்மை இனத்துக்குச் சார்பாகவே அரசுகள் தீர்ப்புகளை வழங்குவதைக் காணமுடிகிறது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு அல்லாமல் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு அனுகூலங்களை வழங்குவதற்காக அமைக்கப்படுகிற ஆணைக்குழுக்களாகவே இருக்கின்றன.

ஆணைக்குழுக்களை அமைத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியதில் தற்போதைய அரசதலைவரின் மாமனான ஜெ.ஆர் கைதேர்ந்தவராக இருந்தார். அவரால் வழிப்படுத்தப்பட்ட தற்போதைய அரசதலைவரும் ஆணைக்குழுக்களை மேலும் குட்டிபோட வைத்து நிலமையைச் சிக்கலாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். இது பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மாறாகச் செயற்படுவதுடன் ஒரு சில பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதாகக் காட்டுவதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்திக்கொள்ளவும் துணைபுரிகிறது. ஒரு வகையில் இது மிகவும் நூதனமான அதேவேளை சட்டபூர்வமான அரசியல் முன்னெடுப்பும்கூட.



ஐயங்கொண்டான் சுவாமிகள்

# ஐமையறிதல்

87

எப்போதுமே கற்பிதங்கள் தனக்கான துணைக்கற்பிதங்கள் எடுகோள்களை தன்னை வலுப்படுத்த என வைத்தேயிருக்கிறது. ஒரு கற்பிதத்தினைச் சுற்றத் தொடங்கும் மனமானது அதனது கிளைகளுக்கும் தாவவே முயல்கிறது. அங்கேயே மனதினது அலைவென்பது தொடங்கிவிடுகிறது. மனம் இவ்வாறான அலைவின்போது கண்களின் கவனத்திசைகளையும் காதுகளின் ஒலியதிர்வுகளையும் நாக்கினது சுவைத் தூண்டுதலையும் மாற்றி மாற்றிக் கற்பிதங்களோடு இணைத்து தனதான விருப்புகளுடன் பொருத்தி திருப்திகாணத் துடிக்கிறது.

மனந்தான் நாவையும் கண்களையும் காதுகளையும் இயக்குகிறது. அவ்வாறேதான் தொடுகையுணர்ச்சியினது நிலையும்.

தொடுகையுணர்ச்சியா? அது என்ன? குளிர், சூடு எனத் தொடங்கி மென்மை, கடினம் என்பது போன்ற உணர்ச்சிகளை அறிந்துகொண்டு அவற்றுக்கான எதிர்வினைகளை ஆற்றுவதற்கான ஒரு உந்துதலைப் பெறுவதுதான் தொடுகையுணர்ச்சி எனக் கொள்ளமுடியும்.

இதனை நாம் எமது உறுப்புகளால் உணர்ந்துகொள்வதாக எண்ணினாலும் உறுப்புகளை மூடியிருக்கும் தோலினது பணிதான் என்பது கவனத்திற்குரியது. ஆனால் கண்டுகொள்ளப்படாதிருப்பது.

ஒரு குறித்தவகையான தூண்டுதலை உணர்ந்து கிரகிக்கிற மனம் அதனை விரும்பவோ வெறுக்கவோ எனத் தன்னுள்ளாக ஒரு தீர்மானத்தை ஏற்படுத்திக்கொள்கிறது. இவ்வாறான தீர்மானமானது வெறும் தூண்டலினால் மட்டும் நிகழ்வதல்ல. அங்கே முன்கற்பிதங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. தூண்டலினால் பெற்றுக்கொண்ட அருட்டுணர்வும் ஏற்கனவே மனதினுள் இருக்கிற இருப்பு அல்லது பதிவும் சேர்ந்த கலவையாகவே பிரதிபலிப்பு இருந்துகொள்கிறது. சில திடீர் அல்லது தன்னியல்பான எதிர்வினைகளும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கன.

தொடுகைசார் எதிர்பார்ப்புகள் மனதினது பட்டறிவு வழியாகவும் தன்னியல்பாகவும் எழலாம். எப்படியெனினும் தோலிற்கு நினைவகமோ பகுப்பகமோ கிடையாது. அது விரும்புவது போலவே விலக்குவதும் மனதினது ஏவலின் படியே என்பதே உண்மையானது. ஆக மனதினது தேவைகளை நிறைவுசெய்யத் துடிக்கிறது என்று கூறுவதும் சரியாகாது. ஏனெனில் தோலினால் தேவையானது தேவையற்றதென எதனையும் பகுக்கமுடியாது. தோலினது உணர்திறன் என்பதுகூட மனதினது இயக்கத்திலேயே தங்கியுள்ளது.

இவ்வாறேதான் மணங்களை உணர்கிற மூக்கினது நிலைமையும். தன்னை அருட்டிய விடயத்தை கணப்பொழுதில் மனதிற்குத் தெரியவைப்பதே அதன் பணியாக உள்ளது. அருட்டியது நறுமணம் என்றோ துர்மணம் என்றோ அது எதனால் பிறப்பிக்கப்பட்டதென்றோ ஒருபோதுமே மூக்கிற்குத் தெரியாது. மனம் ஏனைய விடயங்கள் போலவே தனது பட்டறிவு மற்றும் பதிவுகள் (கற்பிதங்கள் உள்ளடங்கலாக) ஊடாகவே மூக்கினால் அனுப்பப்பட்ட தகவலை பகுத்துணர்கிறது. குறித்த தகவலின்படியானது விரும்பப்படுவதும் வெறுக்கப்படுவதும் இவ்வகையிலேயே நிகழ்கிறது. மூக்கு வெறுமனே ஒரு வாங்கி மட்டுமே.

நாம் கவனத்திற்கொண்டிருக்கிற ஐம்பொறிகளால் மனம் அலைக்கப்படுவதானதுகூட ஒரு வகையான கற்பிதமாகவே இருக்கிறது. அத்தனை உணர்வுகளையும் தனக்குக் கிடைக்கிற சைகைகளுக்கூடாக பிரித்தும் பகுத்தும் வடிவம்கொடுக்கிற பணியை மனமே ஆற்றுகிறது. ஆக பிரிக்கவும் பகுக்கவும் அவற்றுக்கான எதிர்வினையாற்றவும் மனமே இயங்குகிறது. மனமே பொறிகளை இயக்குகிறது. எமது மனமானது கட்டளைகளைப் பிறப்பிக்காதிருந்தால் எமது பொறிகள் செயற்றிறனற்ற வெறும் சடங்களாகவே இருந்திருக்கும்.

'பொறிகளை அடக்குங்கள்' என்பது இப்போது பெரும் ஐயத்திற்குரியதாகிறது. அப்படிச் செய்வது சாத்தியமானதா? பெறுகையுணர் தூண்டல்களை உணர்வதும் எதிர்வினையாற்றுவதும் மனமே. அப்படியாயின் மனம் தூண்டற்பெறுகையிலும் உணர்கையிலும் வெறுமனே சடமாக எந்த எதிர்விIயுமற்று இருக்கவேண்டும். இது சாத்தியமானதா? இதனைத்தான் முன்பு பலமுறை பேசியிருக்கிறோம். மனம் சலனமற்றிருப்பது சாத்தியமானதா?

புலன்கள்வழி அலைவுறுகின்ற மனம், எதிர் புலன்களை பகுத்தாய்ந்து கட்டளையிடுகிற மனம் என்கிற ஒரு விவாதப்புள்ளியில் இப்போது இருக்கிறோம். இப்புள்ளிதான் முக்கியமானது. இவ்வெதிரெதிர் முனைப்பட்ட விடயப் பரப்புகளுக்கு இடையேதான் இருக்கிறது எமது வாழ்வென்பதைக்கூட உணர்வதில் தடுமாற்றங்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதே உண்மையானது. இங்கேதான் எமக்கான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையில் தடுமாறுகிறோம்.

இவ்வகைப்பட்ட தடுமாற்றமானது ஆரோக்கியமானதா? கேடானதா? எப்படியானது? சிந்திப்போம்.

**எந்நேரமும் மலத்துடன் திரிகிற நிலையில், மலம் குறித்து மனிதர்களுக்கு அருவருப்பும் - அதனை நகாரீகமற்றதாகப் பார்க்கும் நிலையுமே நீடிக்கிறது**

பிரணவி

# மலமே மருந்து...!



மலசலகூடத்துக்குப் போகவேண்டும்...? மலசல கூடம் எங்கிருக்கிறது...? என்று கேட்பதைக் கூட அருவருப்பாகக் கருதுவோர் நம்மத்தியில் பலர். மலம் என்ற வார்த்தையைத் தவிர்ப்போரும் அதற்குள் பிரதியீடாக வேறு வார்த்தைகளைப் பயன்படுத்துவோரும்கூடப் பலருள்ளனர். அந்த அளவுக்கு மலம் என்பது அருவருப்பானதாயிருக்கிறது. ஏன் மல சலகூடம் என்று பொறிப்பது கூடக் குறைந்திருக்கிறது என்றால் பாருங்களேன்.

மலம், சலம் ஆகியவற்றுக்குப் பதிலாக ஆங்கில வார்த்தைகளையே நாம் அதிகம் பயன்படுத்துகிறோம். தமிழில் மலத்தையும் சலத்தையும் நாம் தவிர்ப்பதைப்போல ஆங்கிலேயர்கள் தமது மொழியில் அந்த வார்த்தைகளைத் தவிர்ப்பதில்லையே...? அவர்கள் தமது மொழியிலேயே அந்த வார்த்தையைப் பாவிக்கிறார்கள். நாம் எமது மொழியைத் தவிர்த்து அவர்களின் மொழியைப் பயன்படுத்துகிறோம்.

மலம் என்கிற வார்த்தையிலுள்ள அருவருப்பு அந்த அளவுக்கு எம்மைப் பாதித்திருக்கிறது என்பதே உண்மை. ஆனால், தென்னிந்திய யூரியூப் தளங்கள் சிலவற்றிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (குறிப்பாக பிக்பொஸ்) சிலவற்றிலும் மலத்தைத் தவிர்த்தாலும்கூட "கக்கூஸ்" என்று பேசுவதைக் காணமுடிகிறது.

**மலக் காவிகள்**

மனிதர்கள் அனைவருமே எப்போதுமே மலத்தைக் காவித் திரிபவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர்கள் மாத்திரமல்ல விலங்குகள் மற்றைய உயிரினங்கள் என அனைத்தினது நிலையும் இதுதான். எந்நேரமும் மலத்துடன் திரிகிற நிலையில், மலம் குறித்து மனிதர்களுக்கு அருவருப்பும் - அதனை நகாரீகமற்றதாகப் பார்க்கும் நிலையுமே நீடிக்கிறது.

மலம் என்பது உயிர் வாழ்தலில் உடலில் முக்கிய பங்கு வகிப்பைதை மனிதர்கள் மறந்து விடுகிறார்கள்போலும். அதனால் தான் அதை அவர்கள் கழிவு என்கிற வகைப்பாட்டுக்குள் வைத்து நோக்குகிறார்களோ என்னவோ...?





**மல வெளியேற்றம்**

உணவிலிருந்து தனக்குத் தேவையான ஊட்டங்களை அகத்துறிஞ்சிய பின்னர் உடலால் வெளியேற்றப்படுவதே மலம். மலம் மணமுடையதாக இருப்பதற்குக் காரணம் குடலில் இயங்கும் நுண்ணுயிரிகள் உருவாக்கும் இண்டோல், இசுக்கட்டோல், கந்தகம் கொண்டுள்ள தியோல் சேர்மங்கள், கரிமமல்லா வேதிப்பொருளாகிய ஐதரசன்-டை-சல்பைட் (ஐதரச-இருகந்தகம்) முதலியவையே என்கிறார்கள் அதைப் பரிசோதித்தவர்கள். மலம் உடற் தொழிற்பாட்டில் முக்கிய பங்காற்றுகிறது. அதை வெளியேற்றும் நடைமுறையில் சிக்கலில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதிகளவில் வெளியேறினாலோ (வயிற்றுப்போக்கு) வெளியேறாமல் தடைப்பட்டாலோ (மலச் சிக்கல்) உடலுக்குப் பிரச்சினையாகிவிடும்.

இவ்வாறாக வாழ்க்கைச் சுற்றோட்டத்திலும், உணவுச் சுற்றோட்டத்திலும் முக்கிய பங்காற்றுவது மலமே ஆகும். அத்தகைய மலத்தை உடலானது கழிவு என்று கருதி வெளியேற்றினாலும் அந்தக் கழிவில்கூடத் தேவையான - கிடைத்தற்கரிய விடயங்கள் அடங்கிருக்கிறது என்பதும் மலத்துக்கு மவுசை ஏற்படுத்தியிருக்கிறது.

**மலத்துக்கு எப்படி மவுசு...?**


நாம் அருவருப்பாகப் பார்க்கும் மலத்தின் தேவை அதிகம் உணரப்பட்டு வருகிறது - வருங்காலத்தில் மலம் பெரு மருந்தாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால், அந்த நிலை இப்போதே ஏற்பட்டுவிட்டது. நீங்கள் இனி ஆச்சரியப்படத் தேவையில்லை. அந்த அளவுக்கு மலத்தை மருந்தாக்கும் நிலை சாதாரணமடைந்து வருகிறது. இது மலம் குறித்த அருவருப்பை வருங்காலத்தில் நம்மிடமிருந்து தூரப்படுத்தும் என்றே நினைக்கிறேன்.

**சரி மலம் எப்படி முக்கியப்படுகிறது...?**

மலத்தில் மேற்சொன்ன மூலக்கூறுகள் இருப்பதுடன் பக்ரீரியாக்களும் நிறைய இருக்கின்றன. உடலுக்குத் தேவையான பக்ரீரியாக்களுடன் உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற பக்ரீரியாக்களும் இருக்கின்றன. மனிதர்களில் சிலருக்குக் குடலில் பக்ரீரியாக்கள் இல்லாத அல்லது பற்றாக்குறையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பக்ரீரியாக்கள் நிறைந்திருக்கிற ஒருவரின் மலத்தைப் பெற்று உட்செலுத்தும் மருத்துவ முறைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

குடல் மாற்றுச் சிகிச்சைகளுக்குப் பின்னர் சமிபாடு மற்றும் குடல் தொழில்பாடுகள் குன்றியிருப்பதற்குப் பக்ரீரியாக்களின் பற்றாக்குறைதான் காரணம் என்று கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் பிறரின் மலத்தை உட்செலுத்தி அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட நிகழ்வுகள் பல நடந்துள்ளன. இதை விடவும் மலம் பல மருந்துகளுக்கு ஈடான ஆற்றலைக் கொண்டிருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

மலச்சிக்கல்கள் பிரச்சினைக்கு மட்டுமன்றி வேறு பல நோய்களுக்குக்கூட மலம் மாற்றுச் சிகிச்சை மூலம் மலத்தை மருந்தாக்குகிறார்கள். மலத்தில்தான் ஏகப்பட்ட பக்ரீரியாக்கள் வாழ்கின்றன. மலத்திலுள்ள நல்ல பக்ரீரியாக்களை மருந்தாக்குகிறார்கள் என்று சொல்வதே இதற்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும். தேவையான பக்ரீரியாக்கள் அதிகமுள்ளவரின் மலத்தை எடுத்து உட்செலுத்தியதன் மூலம் வயிற்றுப்போக்கு, மலத்துடன் இருந்த குருதிக் கசிவு, தோல் அலர்ச்சி, மூட்டுக்களில் ஏற்படுகின்ற நோவுகள்




எனப் பல நோய்களைக் குணப்படுத்தியிருக்கிறார்கள். இதனால்தான் மலம் மருந்து என்கிற நிலையை அடைந்திருக்கிறது.

குருதிக் கொடையாளர்களைப்போல மலக் கொடையாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். மல வங்கிகள் தோன்றியிருக்கின்றன. மல மாற்றுச் சிகிச்சைக்காக ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்ட குடல் பாக்ரீரியா ஆய்வு செய்யப்படுகிறது. மிகவும் பொருத்தமான நுண்ணுயிரிகளை அடையாளம் காணவும் ஆராய்ச்சி நடக்கிறது.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற பக்ரீரியாக்களை அகற்றி ஆரோக்கியத்துக்கு உறுதுணையாக இருக்கின்ற பக்ரீரியாக்கள் நிறைந்த மலத்தையே மலம் மாற்றுச் சிகிச்சைக்குப் பயன்படுத்துகிறார்கள். இனி மலம் மணக்கும் என்கிற அருவருப்பு இல்லாமல்போக வாய்ப்புள்ளது போல்தான் தெரிகிறது.



பிருந்தா

# தும்பிக்கு சல்யூட்..?

வீட்டுக்குப் பின்னாலுள்ள வயல்வெளியை அண்மித்திருக்கிற புற்தரைகளில் எந்நேரமும் ஒரே தும்பிக் கூட்டமாயிருக்கும். வயலுக்குச் சென்றால் தும்பி பிடிப்பதுதான் எங்களுக்கு வேலை. வேலை என்பதைவிட அது நல்லதொரு விளையாட்டாக எங்களுக்கு இருந்தது. வயலுக்கு எங்களை அழைத்துச் செல்லும் பெரியவர்கள் வயல் வேலையில் பிசியாக இருப்பதால் எங்களைத் தன்பாட்டில் விட்டுவிடுவார்கள். அது எங்களுக்கு வாய்ப்பாகிப்போனது. இதனால் தும்பி பிடித்து விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டோம். அப்போது எங்கள் சகாக்களின் வயது 7இலிருந்து 10க்குள் இருந்தது. நாம் தும்பிகளையும், வண்ணாத்துப் பூச்சிகளையும், கறுப்புப் பொட்டுக்களையுடைய சிவப்பு நிறச் சிறிய வண்டுகளையும் பிடித்து விளையாடுவோம்.

சிவப்பு நிறச் சிறிய பூச்சிகள் தாழ்வாகப் பறப்பவை. சிறிய தாவரங்களில் அமர்பவை. வெகுநேரம் பறக்காத அவற்றைப் பிடிப்பதும் சுலபம். தமது இரு பக்க இறக்கை மூடிகளை விரித்து அதற்குள்ளிருந்து இறக்கைகளை வெளியே எடுத்துப் பறக்கத் தயாரகும் பழக்கத்தை அவை கொண்டிருந்தன. அவை பறக்கத் தயாராவதைக் கண்டால் அதற்கு எடுக்கும் நேரத்தை மனதளவில் கணித்து அவற்றைப் பிடித்துவிடலாம். அவ்வளவு வேகமாகப் பறப்பனவும் அல்ல. வெகு தூரமும் பறக்கமாட்டா. அதனால் அவற்றைப் பிடிப்பதும் பின்னர் பறக்க விடுவதும், அவற்றின் பின்னாலே ஓடிப்போய் மறுபடியும் அவை அமரும் தாவரத்தில் வைத்து அவற்றை மடக்கிப் பிடிப்பதும் விடுவதுமாக விளையாட்டுத் தொடரும். அது பின்னர் பிடித்தமான விளையாட்டாகிப்போனது.

**கவர்ந்த தும்பிகள்**

எல்லாவற்றையும்விட எம்மைக் கவர்ந்தது தும்பி பிடித்து விளையாடும் விளையாட்டுத்தான். கலர்த் தும்பி, ஊசித்தும்பி, மாட்டுத்தும்பி, மண்டைக்கண் தும்பி என்றெல்லாம் தும்பிகளுக்குப் பெயரிட்டிருந்தோம். கலர் கலராகவிருக்கும் அவற்றைப் பிடித்துச் சேர்ப்பதும் யார் அழகான நிறத் தும்பிகளை வைத்திருக்கிறோம் என்று பட்டியல்படுத்தித் தரப்படுத்துவதும் ஒருவகையான விளையாட்டாக இருந்தது.

ஊசித்தும்பிகள் என்கிற மெல்லிய உடல்வாகுவைக் கொண்ட தும்பியினங்களைப் பிடிப்பதும் ஒருங்கு சேர்ப்பதும் சற்றுக் கடினமாக இருக்கும். ஆனால், மண்டைத் தும்பி என்கிற தலைபெருத்த, வேகமாகப் பறக்கக்கூடிய தும்பிகளைப் பிடிப்பது சிரமம். வேகமாகச் செயற்படும் அவற்றின் பார்வையில் படாமல் அவற்றை நெருங்கிப் பிடிப்பது சுலபமான காரியமல்ல. சருகுச் சத்தம், மூச்சு ஓசை கேட்டால் ஐயப்பட்டு அவை பறந்துவிடும். இதனால் அவற்றில் ஒன்றிரண்டு தும்பிகளைத்தான் பிடிக்க முடிந்தது. இவற்றைப் பிடிப்பவர்களுக்கே மவுசு அதிகம் இருக்கும். இவற்றின் இறக்கைகளின் அழகும் உடல் வனப்பும் இவற்றை ராசாத் தும்பிகள் என்று சொல்லும் பழக்கத்தை எங்களுக்கு ஏற்படுத்தியது.

ராசாத் தும்பிகளின் இறக்கைகள் தடித்த பொலித்தீனைப்போல நரம்புகளால் ஓவியம் வரைந்தாற்போல அமைந்திருக்கும். உடலுடன் இறைக்கைகள் இணையும் இடத்தில் கடும் சிவப்பு நிறமிருப்பதுடன் இறகுகளின் திசையில் அது மெல்ல மெல்ல மறைந்து செல்லும் விதம் பார்க்க அழகாக இருக்கும். அதுதான் அந்தத் தும்பிகளுக்குக் கொள்ளை அழகும்கூட.

**தும்பி பிடித்தால்... கண் வருத்தம்**

தும்பிகளை அதிகளவில் பிடித்து அவற்றின் இறக்கைகளைப் பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையிலும் இருக்கும் விதத்தில் வைத்திருப்போம். அதைக் கண்டால் பெரியவர்கள் ஏசுவார்கள். "தும்பியளைப் பிடிக்காதேங்கோ பிள்ளையளே கண்வருத்தம்



வந்திரும்.." என்பார்கள். தும்பிகளைப் பிடித்து நீண்டநேரம் எமது விரல்களுக்குச் சிக்கியிருக்கும் அவற்றை விடுவிக்கும்போது வானவெளியில் காற்றை வெட்டி அவை பறப்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அதுமட்டுமல்ல தும்பிக

**தும்பிகள் நீரில் முட்டையிட்டு நீருக்குள்ளேயே சிலகாலம் வாழ்கின்றன. பின்னர்தான் இறக்கை முளைத்து வெளியில் பறக்கின்றன.**

ளில் வால் பகுதியில் நூலைக் கட்டிப் பறக்கவிடுவதும் சுவாரசியமாக இருக்கும். வால் பகுதியில் கட்டும் நூல் கயிறு அவை பறக்கும் வேகத்தில் அசைவுக்கு ஏற்ப வளைந்து நெளிந்து செல்வதை ரசிப்பது வழக்கம். அவ்வாறு கட்டும் நூல்களால் அவற்றுக்குப் பெரும் ஆபத்து என்று அப்போது எமக்குத் தெரிந்திருக்க வில்லை. பின்னாளில் அது தவறு, வதைக்கும் செயல் என்பதைப் புரிந்து கொண்டேன்.

**ஞாபகத்தை மீட்டிய தும்பிகள்**

சிறுவயதில் தும்பி பிடித்து விளையாடிய ஞாபகத்தை அந்தத் தும்பிகள் தான் தற்போதும் மீட்டின. தும்பிகள் நீரில் முட்டையிட்டு நீருக்குள்ளேயே சிலகாலம் வாழ்கின்றன. பின்னர்தான் இறக்கை முளைத்து வெளியில் பறக்கின்றன. வானவெளியில் பறக்கும் பூச்சியினங்களில் அவற்றைப் போன்ற வேட்டையாடிகள் இல்லை என்கிறார்கள். காற்றில் வேகமாகச் செயற்பட்டு இரைகளைக் கௌவிக் கொள்வதில் தும்பிகள் வல்லமை மிக்கவை. எதிரிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் நழுவும் ஆற்றலும் அவற்றுக்குண்டு. தும்பிகள் பறக்கும் விதத்தைக் கற்றுத்தான் நம்மவர்கள் வானூர்திகளைப் பறக்க வைக்கும் நுட்பத்தைக் கற்றார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

வானவெளியில் மாத்திரம்தான் தும்பிகள் கெட்டித்தனம் மிக்கவையா? என்று தேடிப்பார்த்தால் அது தான் இல்லை. நீருக்குள் வாழும் சிறு பராயத்திலேயே அவைதான் நீர் வாழ் உயிரிகளிலும் வேட்டை ராஜாக்களாம்...! நீருக்குள் குடம்பிகளாக இருக்கும்போது அதே நீருக்குள் முட்டையிடுகின்ற நுளம்புகளின் குடம்பிகளை விரட்டி விரட்டி உண்கின்றன...! அதைவிடத் தவளைகளின் குடம்பிகளான வாற்பேத்தைகளையும் ஒன்றுவிடாது விரட்டியுண்கின்றன. ஆனால், தும்பிகள் அதிகம் உண்பதும், விரும்பி உண்பதும் நுளம்புகளின் குடம்பிகளைத்தான். இந்தச் செய்திதான் தும்பிகளின் ஞாபகத்தை மீட்டியது. நம்மை அச்சுறுத்துகின்ற, நமக்கு எதிரியாக இருக்கின்ற, நம்மவர்களில் பலரின் சாவுக்குக் காரணமாக அமைகின்ற நுளம்புகளை நமது சிறு வயது நண்பன் கொல்கிறான் என்றால் நமக்குச் சிலிர்க்காதா... என்ன...? அதனால்தான் அந்த நண்பனுக்குச் சல்யூட்....!



# ஏன்...? 38

# அப்படி...?

நட்சத்திரா

# நீல வானம்



வானம் என்ன நிறம் என்று கேட்டால், நீலம் என்று அனைவரும் தயங்காமல் சொல்வார்கள். வானம் வரையுங்கள் என்று சொன்னால் குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள்வரை நீலம் தீட்டுவார்கள். வானம் நீல நிறம்தானா...? ஏன் அது நீல நிறத்தில் இருக்கிறது...?

வானம் என்பது பரந்த வெளி. அந்த வெளியின் நிறத்தைத் தீர்மானிப்பது சூரிய ஒளி. சூரிய ஒளியானது பகலில் நாம் காணும் வெண்மஞ்சளாக இருந்தாலும் அதில் நிறைய நிறங்கள் இருக்கின்றன. வானவில்லில் அவற்றையே நாம் காண்கிறோம். நிறப்பிரிகை அடைவதால் தோன்றும் வானவில்லில் அனைத்து வர்ணங்களும் இருக்கின்றன. வெள்ளை ஒளிதான் அப்படிப் பிரிகிறது. எனவே, வானமும் நமக்கு வெள்ளை நிறத்திலேயே தெரிய வேண்டும். ஆனால், ஏன் அப்படித் தெரிவதில்லை?

வானவெளியிலுள்ள வளிமண்டலத்தில் பல மூலக்கூறுகள், தூசு துணிக்கைகள் உண்டு. கோடிக்கணக்கான நுண்ணிய தூசுத் துகள்கள் பரவியிருக்கின்றன. எமது கண்களுக்குத் தெரியாத அளவுக்கு அவை நுண்ணியவை.

இந்த நுண்ணிய துகள்கள்தான் நீலநிற ஒளியின் அலையை அதிகரித்து வானத்தை நீலமாகக் காட்டுகின்றன. சூரிய ஒளியிலிருந்து வெளிவருகிற 7 நிறங்களில் ஊதா, நீலம் ஆகியனவே அலைநீளம் குறைந்தவை. அலைநீளம் குறைந்திருப்பதால் அவை வானவெளித் துணிக்கைகளில் அதிகம் சிதறல் அடைகின்றன. அதனால்தான் வானம் நீலமாகத் தெரிகிறது. நீலத்தைவிட ஊதா அதிகம் சிதறல் அடைந்தாலும் நமது கண்களில் ஊதாக் கதிர்களை உணரும் ஆற்றல் குறைவாக இருப்பதால் அது பெரிதாகத் தெரிவதில்லை. நீலம் தெரிகிறது. அதனால்தான் வானம் நீலமாக இருக்கிறது.

சூரியனின் ஒளி வளிமண்டலத்தில் நுழையும்போது, அதில் கலந்துள்ள பெரும்பாலான நிறங்களின் அலைநீளம் அதிகமாக இருப்பதால் எந்த இடையீடும் இல்லாமல் பூமியின் மேற்பரப்பை வந்தடைந்து விடுகின்றன. ஆனால் நீல நிற ஒளி, வளிமண்டலத்தில் உள்ள துகள்களின் அலைநீளத்தை ஒத்திருப்பதால், அது எல்லா திசைகளிலும் சிதறடிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 100 கிலோமீற்றர் நீளம் கொண்ட வளிமண்டத்தில் உள்ள ஒவ்வொரு நுண்ணிய துகளிலும் நீலநிற ஒளி மோதிச் சிதறடிக்கப்பட்டு, கடைசியாக நம் கண்களை வந்தடையும் வரை துகள்களில் மோதிக் கொண்டே இருக்கிறது. இந்தக் காரணத்தால், வானத்தை எந்தப் பக்கத்தில் இருந்து

நாம் பார்த்தாலும் அது நீல நிறமாகவே தெரியும். நீலநிறத்தை விடவும் அலைநீளம் குறைவான ஊதா அதிகமாகச் சிதறடிக்கப்பட்டாலும்கூட, குறிப்பிட்ட சில நிறக் கதிர்களை பார்ப்பதற்கான உணர் திறன் நமது கண்களில் குறைவாக இருப்பதால், நீல நிறமே பார்வையில் ஆதிக்கம் செலுத்து கிறது.

மாலை அல்லது அதிகாலை வேளைகளில் சூரியன் மிகவும் தொலைவிலும், சற்றுச் சாய்ந்தும் இருப்பதால், சிதறடிக்கப்படும் நீல நிற ஒளி வேறு திசைக்குச் சென்று விடுகிறது. அப்போது மாத்திரமே வானம் மஞ்சள் அல்லது செம் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இப்போது புரிகிறதா வானம் ஏன் நீலம் என்று...?

# சுவீடன்: பள்ளிக்கல்வியில் அரசியல் பாடம்

06



விஜய் அசோகன்

இந்தக் கட்டுரைத் தொடர் தொடங்கும்போது, ஃபின்லாந்து மட்டுமல்ல நோர்வே, சுவீடன், டென்மார்க் நாடுகளிலும் பள்ளிக்கல்வித் துறை மற்றும் சமூக அமைப்புகளில் பொது ஒற்றுமைத்தன்மை உண்டென விளக்கியிருந்தேன். அவைகளில், மக்களாட்சி விழுமியங்களை உள்ளுணர்ந்த சமூக அமைப்பும் ஒன்று. காலனியாதிக்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பெரும்பாலுமான நாடுகள் இழந்தவற்றில் முதன்மையானது, வெளிப்படையான சமூக மக்களாட்சி கட்டமைப்பும் தாய்மொழி உணர்வும்!

நோர்வே நாடு, டென்மார்க் கட்டுப்பாட்டில் 400 ஆண்டுகளும், சுவீடன் கட்டுப்பாட்டில் 100 ஆண்டுகளும், அதேபோல ஃபின்லாந்து சுவீடன் கட்டுப்பாட்டில் 600 ஆண்டுகளும் ரஷ்யா கட்டுப்பாட்டில் 100 ஆண்டுகளும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தும் தங்களின் தாய்மொழியையும் சமூகத்தின் மக்களாட்சி அமைப்பையும் கட்டிக்காத்து உள்ளதை 15 ஆண்டுகளாக நேரில் கண்ட தருணங்களில் எல்லாம் கல்வித் துறைக்கும் இவற்றுக்கு மான தொடர்புகளைத் தேடியதன் விளைவே எனது முந்தைய நூலான 'தாய்மொழிக் கல்வி'யை எழுதியிருந்தேன்.

இந்தக் கட்டுரையில், கல்வித் துறையில் இந்த நாடுகள் பின்பற்றும் மக்களாட்சிக் கருத்துருவாக்கப் பாடங்கள் குறித்தான செய்திகளைக் காண இருக்கிறோம். மிகச் சமீபத்தில் எங்கள் மூத்த மகன் 6ஆம் வகுப்பு பயிலும் பள்ளியில் நடந்த தேர்தல் ஒன்றினைக் காண்போம். தொடக்கப் பள்ளியில் 6ஆம் வகுப்பு வரை இருக்கும். அதன் பிறகு, அடுத்த படிநிலை வகுப்பிற்காக நடுநிலைப் பள்ளிக்குச் செல்வார்கள்.

பள்ளிக்கல்விக் காலங்களில் அரசியல், சமூகம்,

உலக ஓட்டங்கள் சார்ந்த பல்வேறு செய்திகளைக் குழந்தைகளுக்கு எளிதாக புரியும் வண்ணம் நோர்டிக் நாடுகளில் செய்முறைப் பயிற்சிகளை வழங்குவார்கள். அதன்படி, தேர்தல் அரசியல் கட்சிகள் சார்ந்தும் பயிற்சிகளின் வழியே கற்றுக்கொடுக்கிறார்கள்.

தேர்தல் பரப்புரைகளின்போது வணிக வளாகங்கள் பொதுமக்கள் கூடும் இடங்களில் அரசியல் கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளை நிறுத்தி தொடர்ந்து பரப்புரைகளை மேற்கொள்வர். அப்போது எங்கள் மகனின் வகுப்பில் உள்ளவர்களை வீதி உலா அழைத்துச் சென்று, அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மக்களிடம் பழகும் விதம், பரப்புரைகள் மேற்கொள்ளும் விதம், என்னென்ன அரசியல் பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்க வைத்திருக்கின்றனர்.

அதன் பிறகு தொடக்கப் பள்ளியில் இறுதி ஆண்டு படிக்கும் 6ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்குள் கட்சிகளை உருவாக்கியுள்ளனர். எங்கள் மகனும் அவன் வகுப்பு நண்பர்களும் சேர்ந்து உருவாக்கிய கட்சி, விளையாட்டுக் கட்சி என்று சொன்னார். அவரது வகுப்புத் தோழர்கள் உருவாக்கிய ஏனைய கட்சி, உணவுக் கட்சி, பள்ளி வளாகக் கட்சி, நிர்வாகக் கட்சி. ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள் விவாதித்து, பள்ளியில் இருக்கும் ஏனைய தொடக்கப் பள்ளி மாணவ மாணவிகளிடம் ஒவ்வொரு கட்சியும் தங்கள் கட்சிக்கு வாக்களித்தால் என்னென்ன செயல்பாடுகளைப் பள்ளி நிர்வாகத்திற்குக் கொண்டு செல்வோம் என்பதை விளக்கம் கொடுத்து பரப்புரை செய்திருக்கிறார்கள்.

விளையாட்டுக் கட்சி, விளையாட்டுகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் தொடர்பான பள்ளிகளின் செயல்பாடுகள் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்தும் உணவுக் கட்சி பள்ளியில் வழங்கப்படும் உணவுகள் தொடர்பாகவும் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்தும் பள்ளி வளாகக் கட்சி வகுப்பறைக்கு வெளியே ஆசிரியர்களின் செயல்பாடுகளில் வர வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கடுமையான பரப்புரை மேற்கொண்டு மோதிக்கொண்டன, நிர்வாகக் கட்சி தங்கள் பள்ளி நிர்வாகத்தைத் தாங்கள் நடத்தினால் எதனையெல்லாம் செய்வார்கள் என்றும் விவாதித்ததாக எங்கள் மகன் விளக்கிக் கூறினார்.



**வகுப்பில் உள்ளவர்களை வீதி உலா அழைத்துச் சென்று, அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மக்களிடம் பழகும் விதம், பரப்புரைகள் மேற்கொள்ளும் விதம், என்னென்ன அரசியல் பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்க வைத்திருக்கின்றனர்**

அடுத்த கட்டமாக, தேர்தல் பரப்புரைகள் முடிவடைந்து தேர்தலும் நடந்திருக்கிறது. முடிவைப் பற்றி நாங்களும் கேட்கவில்லை, அதனை இங்கே சொல்லப்போவதும் இல்லை. நோர்டிக் நாடுகளில் மக்களாட்சியைக் கற்றுக்கொடுக்கும் விதம் தொடர்பான பேச்சு திசை மாறி, சுவீடனின் பள்ளிக் குழந்தைகள் எதனை விரும்பி வாக்களித்தார்கள் என விவாதம் மாறிவிடுமோ என்ற அச்சமும் அதற்குக் காரணம்.

இந்த மக்களாட்சி எத்தகையதாக வளர்ந்த தலைமுறையினரிடம் உள்ளது என்பதற்கான எனது நேரடி அனுபவம் நான் பணியாற்றிய சால்மர்ஸ் பல்கலைக்கழகத்தில் எங்கள் வேதியியல் பிரிவில் கண்டேன்.

சுவீடன் பல்கலைக்கழக மக்களாட்சி முறைமை

2018, நான் சுவீடனில் சால்மர்ஸ் பல்கலைக்கழகத்தில் பணிக்குச் சேர்ந்திருந்தத் தொடக்கம் அது. சுவீடன் பல்கலைக்கழகமோ, நிறுவனங்களோ எதுவாகிலும் அங்கு பெரும்பாலும் ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமையும் காலை 08:30 மணிக்கு குழு செயற்பாடுகள் குறித்தான விவாதம் நடக்கும். அவை நடக்கும் விதம் குறித்தான சீராய்வினை மேற்கொள்ளப் போகிறோம் என மின்னஞ்சல்

வந்தது. குழுவின் பொதுக்கணக்கிற்கு வந்த அந்த அழைப்பில், முக்கியக் குறிப்பாக, ஆய்வுக் குழுத் தலைவர்கள், ஆய்வுத் திட்டத் தலைவர்கள், மூத்தப் பேராசிரியர்கள், மூத்த ஆராய்ச்சியாளர்கள் யாரும் கலந்துகொள்ளக்கூடாது எனவும் முதுநிலை ஆய்வு மாணவ, மாணவியர்கள், இளநிலை ஆராய்ச்சியாளர்கள், மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவ, மாணவியர்கள் மட்டும் கலந்துகொள்ளலாம் என்றும், என்னைப் போன்று சமீபத்தில் இணைந்த முதுமுனைவு ஆராய்ச்சியாளர்கள் விருப்பப்பட்டால் கலந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மூத்தப் பேராசிரியர்களும், குழுத் தலைவர்களும் சிறிய கலந்துரையாடல் கூட்டமே நடத்தினாலும் அதன் சீராய்வினை இளநிலை மாணவ, மாணவியர்கள் மேற்கொள்ளலாம் என்ற அளவிலான ஜனநாயகத்தன்மை அன்றைய பொழுதில் பெரிதும் ஈர்த்தது. அதுவும், அனைவருக்கும் தெரிந்தே, ஆய்வுக் குழுவின் கூட்ட அரங்கில், அலுவல் நேரத்தில் முறைப்படி அறிவிக்கப்பட்டு நடந்தது சிறப்பான செய்தியினை எனக்கு வழங்கியது.

அடுத்த வாரம், எங்கள் வாரந்திரக் கூட்டத்தில், ஆய்வுக் குழுத் தலைவர் சிரித்துக்கொண்டே, 'எங்களுக்கு எதிராக என்னவெல்லாம் குண்டு இன்று வெடிக்கப்போகிறது' என வினவித் தொடங்கிவைத்தார். சீராய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை முனைவர் பட்ட ஆய்வு மாணவி ஒருவர் வாசித்தார், அதற்கு விவாதம் தேவைப்பட்டால், தாராளமாக முதலில் குழுத் தலைவர்களும் பேராசிரியர்களும் தனியேக் கூடிப் பேசிவிட்டு, அனை வரோடும் கலந்து விவாதிக்க நாள், நேரம் குறித்துச் சொல்லலாம் என்றும் அம்மாணவி முடிவுரை வழங் கினார்.

இளநிலை ஆராய்ச்சியாளர்களும் மாணவ, மாணவிகளும் கலந்துகொண்ட சீராய்வுக் கூட்டத்தின் முடிவில் முக்கியமான தீர்மானம், 'குழுத் தலைவர் தலைமை தாங்கி நடத்தும் வாராந்திரக் கூட்டம் நேரம் ஒழுங்கின்மையோடு நடக்கிறது' என்ற குற்றச்சாட்டும் இருந்தது. அதற்கு, தலைமை பேராசிரியர் ஒருவர் வாராந்திரக் கலந்துரையாடல் கூட்டத்தினை அடுத்தடுத்த வாரங்களில் நடத்தலாம் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

மக்களாட்சிக்கான மதிப்பினை வழங்கும் அடிப்படைக் கல்வி

பல்வேறு மொழி, இன, பண்பாட்டுப் பின்னணியில் இருந்து சுவீடன், ஃபின்லாந்து, நோர்வே, டென்மார்க் நாடுகளுக்குக் கல்வி பயிலவரும் குழந்தைகளுக்கு இடையேயான தொடர்பாடலைச் சமத்துவப்படுத்துவதன் வழியாகவும், உரையாடல்கள், விவாதங்களை வளர்ப்பதன் வழியாகவும், அவரவர் கருத்தினை பிறர் மீது திணிக்காத வகையிலும் எவர் ஒருவரின் எதிர்க் கருத்தையும் உள்வாங்கும் நிதானத்தையும் கற்றுக்கொடுப்பதற்கு என களமாகப் பள்ளியினை வரையறுத்து, அதற்கேற்ற வகையிலான ஆசிரியர் பயிற்சிகளையும், குறிப்பாக, சமூகக் கட்டமைப்பு சார்ந்த கோட்பாட்டு வடிவிலான பாடங்களோடு, கள ஆய்வுச் செயற்பாடுகளையும் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

எங்கள் மூத்த மகளிடம் அவரது வகுப்பறைகளின் செயற்பாடுகளைப் பற்றி வினவியபோது, அவர் சொன்னவற்றைத் தொகுத்தால், "ஒரு வகுப்பறையின் குழந்தைகள் பல்வேறு மாறுபட்ட சமூகப் பின்னணியில் இருந்து வந்திருக்க வாய்ப்புள்ளதால், அவர்களுடனான உரையாடலைத் தொடர்ந்து நிகழ்த்துவதோடு, ஆசிரியரின் முன்னிலையில் குழந்தைகள் பல்வேறு விவாதங்களை மேற்கொள்ளும் வகையில் வகுப்பறையை அமைத்துக்கொள்கிறார்கள்" என்பது எனக்கு புலனாகியது.

தொடர்ந்து ஒரே ஆசிரியர் ஒவ்வொரு பள்ளி ஆண்டிலும் அதே குழுவினரோடு தொடர்ந்து இயங்கும்போது, ஆசிரியர் - மாணவப் பிணைப்பினால், தனிப்பட்ட ஒவ்வொரு குழந்தைகளின் உளவியலையும் ஓர் ஆசிரியர் கற்று அதற்கேற்ற வகையில் வாத-விவாதக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, வகுப்பறையில் மக்களாட்சித் தத்துவத்தை நிலைநாட்டுகிறோம் என பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பில் என் கேள்விக்கு எங்கள் குழந்தைகளின் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.



பல்வேறு கலாசாரக் குழந்தைகளையும் சமத்துவமாக மதிப்பதின் வழியாகவும் வகுப்பறை மக்களாட்சிச் செயற்பாடுகளின் வழியாகவும் மட்டுமே கல்வியில் மக்களாட்சியை (Educational Democracy) உணரவைத்து, சமூக மக்களாட்சியை (societal democracy) நிலைநாட்ட முடியும் என சுவீடன் பள்ளிக்கல்வியின் ஜனநாயகப் போக்குக் குறித்தான ஆய்வறிக்கைகளும் பள்ளிக் கல்விச் சட்டங்களும் ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன.



# என்னதான் நடக்குது?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை கோயிலடிக்குப் போயிருந்தன். அங்கை கனகர், சம்பர், தம்பர் எல்லாரும் இருந்தினம். நானும் இருந்துகொண்டன். அவையின்ரை கதை பள்ளிக்கூடங்களிலைதான் இருந்தது. உந்த ஒஎல் சோதினையான் மறுமொழி வந்திருக்கல்லே? அதுதான் கதையாய் இருந்துது. 'என்னப்பா கதிரேசண்ணை! பேசாமலுக்கிருக்கிறியள்?'' எண்டு கேட்டார் சம்பர். 'ஓஓஓ...உன்ரை குரல் கேக்கிறவரைக்கும் நீ ஆரெண்டல்லே யோசிச்சுக்கொண்டிருந்தனான்.... எங்கையப்பா காணவே கிடைக்குதில்லை?' எண்டு நான் கேட்டதுக்கு சம்பரைத் தவிர மற்ற ரண்டு பேரும் சிரிச்சினம்.

'எங்கைதான் வெளிக்கிடுறது? வெளிக்கிட்டுந்தான் என்ன எண்டுறதும் ஒண்டு..' எண்டு முடிக்கயில்லை 'பேத்தியோடை அடிக்கடி காணுறனான்...ரியூசன் பிராக்குப்போலை?' எண்டார் கனகர். 'உதுதானப்பா பெரிய பிரச்சனை... மருமேன் வெளியாலை போனதாலை நானல்லே முழுசாய் மாட்டுப்பட்டிட்டன்... பள்ளிக்கூடம் தூர... மாறிமாறி ரியூசனுகள்.. ஒவ்வண்டு ஒவ்வரிடத்திலை...நான் படுகிறபாடு...' எண்டு சலிப்போடை பெருமூச்சொண்டை விட்டார்.

'உதுதானெயப்பா இப்பத்தேப் பாசன் நகரப் பள்ளிக்கூடம்... ஒரு பாடத்துக்கு ரண்டு ரியூசன் மூண்டு குறுப்கிளாஸ்...' எண்டு கனகர் சொல்லிக்கொண்டிருக்க 'பேசனல் கிளாசுகளுமல்லே?' எண்டு தம்பர் முடிச்சார். 'ஓடு ஓடு எண்டு ஓடிக்களைச்சுப்போகிற பிள்ளையள் சொந்தமாப் படிக்கிறதுக்கல்லே ஏலாத ஆக்களாப் போட்டுதுகள்' எண்டு நான் சொன்னதை ஆமோதிச்சினம். முருகேசர் வந்துநிண்டு சுழண்டு தேடுறதைக் கண்ட தம்பர் கூப்பிட வந்து இருந்துகொண்டார்.

'என்னப்பா முருகேசண்ணை பேத்தி 9ஏயாம் அப்ப கொண்டாட்டமொண்டும் இல்லையோ?' எண்டு கனகர் முருகேசரைப் பாத்துக் கேட்டார். 'ம்ம்ம்..ம்ம் கண்டறியாத கொண்டாட்டம்... மேள் கொண்டாடத்தான் வெளிக்கிட்டவள்... பெட்டையின்ரை சினேகிதங்களும் கேட்டதாம்... அதைவிட மேளின்ரை சினேகிதங்கள்தான் ஒற்றைக்காலிலை நிக்குதுகளாம்...' எண்டு கொண்டிருக்க 'அப்ப பேந்தென்னப்பா செய்திட வேண்டினதுதானே?' எண்டார் தம்பர்.

'அப்பிடித்தான்... அதுதானிப்ப இல்லாத குறையாக் கிடக்குது... மருமேனுக்குக் கொஞ்சமும் உதுகளிலை விருப்பமில்லை... அதாலை என்பாடு பிரச்சனையில்லா மலுக்குப் போட்டுது... பேத்திக்கும் தேப்பனுக்கும்தான் பிரச்சனையாப் போட்டுது...' எண்டு பெருமூச்சு விட்டார் முருகேசர். 'நல்ல றிசல்ற்ஸ் கொண்டாட வேணுமெண்டதும் இப்ப ஒரு பாஸனல்லே ஏனப்பா குழப்புறியள் மாமனும் மருமேனுமாய்?' எண்டு கனகர் கேட்டார்.

'நான் நினைச்சதைத்தான் மருமேன் சொல்லிச் சிரிச்சுப்போட்டார்.... நான் சொல்லியிருந்தால் ரண்டு பேரும் பத்திரகாளியாட்டம் ஆடியிருக்குங்கள்... அந்தாள் சொன்னதாலை அழுகையள் மூக்குச் சீறுதலுகளோடை நிண்டிட்டுது' எண்டு எல்லாரையும் ஒருக்காப் பாத்தார். 'அதென்னத்தையண்ணை சோன்னவர்? சிரிச்சவர்?' எண்டு தம்பர் அந்தரப்பட்டுக் கேட்டார்.

'அதோ? ஊன்ரை றிசல்ற்ஸ், நீயே பலகாரங்கள் செய்து வாறவைக்குக் குடுப்பியோ? அம்மாவாவது செய்வவோ? நீதான் வாறவைக்கு உன்ரை கையாலை போட்டுத் தேத்தண்ணியாவது குடுக்கிறதெண்டாச் செய்யலாம் எண்டுதான் சிரிச்சவர்' எண்டு தானும் சிரிச்சார் முருகேசர். 'ஏனண்ணை பேத்திக்குத் தேத்தண்ணி போடத் தெரியாதோ?' எண்டு கேட்டார் தம்பர். 'எடேய் தம்பு இப்பத்தேப் பிள்ளையளுக்கு உதுகளைப் பழகிறதுக்கு நேரங்கிடக்கோ? அப்பிடி ஒருநாள் அதுகளாய் வெளிக்கிட்டாலும் தாய்மார் விடுகினமோ?.... படி படியெண்டல்லே கலைக்கினம்' எண்டு கனகர் எரிச்சல்பட்டார்.

'சோதினை முடிஞ்சு இவ்வளவு நாளும் என்னதான் செய்ததுகள் வீடுகளிலைதானே இருந்துதுகள்?' எண்டு கேட்டார் தம்பர். 'எடேய் தம்பு நீ எந்த உலகத்திலை இருக்கிறாய்? கொம்பியூட்டர் கிளாஸ், ஸ்போக்கிண் இங்கிலீஸ் கிளாஸ், ....' எண்டு சம்பர் புறுபுறுத்து முடிக்கயில்லை 'உந்தப் பேசியல் வகுப்பை விட்டிட்டியள்?' எண்டார் தம்பர். 'உதெல்லாம் தெரியுதில்லே...அப்ப பிள்ளையளுக்கு வாழ்க்கைக்கு அவசியமானதெண்டு என்னத்தைத்தான் படிக்கிறது' எண்டு கேட்டார் கோவமாய் கனகர். முருகேசரும் 'அதுதானே?' எண்டார்.

'அப்ப எதிர்காலத்திலை கொண்டாட்டங்களே கஸ்ரம்தான் என்ன?' எண்டுது தம்பர். 'வடிவாய்க் கொண்டாடலாந்தான்... போன் பண்ணிக் காசைக் குடுத்தால் எல்லாக் கொண்டாட்டங்களும் சிறப்பாய் நடக்கும்' நடக்கட்டே எண்டுகொண்டு எழும்பி வீட்டை வந்திட்டன்.

# பனி விழும் மலர் வனம்

**மதி**

பெண்ணுடல் ஏன் அதிகம் கொண்டாடப்படுகிறது...? பெண்ணுடலைப் பார்க்கத் துடிக்கும் ஆண்கள் அதிகம் இருப்பதைப்போலவே பெண்ணுடலைக் கொண்டாட - அழகுபடுத்த நினைக்கும் பெண்களும் அதிகளவில் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு முக்கியம் பெறுகிறது பெண்ணுடல்.

உண்மையிலும் அற்புதப் படைப்பு பெண். ஆணைவிடப் பெண்ணில் அதிசயங்கள் ஏராளம் என்பது தென்னிந்தியத் திரைப்படப் பாடலாசிரியர்கள் மாத்திரம் ஓதி வரும் விடயமல்ல. ஆங்கில ஆராய்ச்சியாளரும் அறிவியலாளரும் அண்டவியலாளருமான ஸ்ரீபன் ஹக்கிங்ஸ் கூடப் பெண்கள் விநோதமானவர்கள் என்றே சொன்னார். பெண்களின் படைப்பிலும் பெண்ணுடலிலும் ஏராளம் அதிசயங்கள் நிறைந்திருக்கின்றன என்றார்.



அண்டவியல் ஆராய்ச்சிகளிலும் குவாண்டம் இயங்கியல் கண்டுபிடிப்புகளிலும் கொடி கட்டிப் பறந்த ஜாம்பவானான ஹக்கிங்ஸூக்கே பெண் என்பவள் அதியசமளித்திருக்கிறாள் என்றால் பாருங்களேன்...? இதனால்தான் உடல் இயக்கமுறாமல் முடங்கிக் கிடந்த நிலையிலும் அவருக்கு இரண்டு துணைவிகள் தேவைப்பட்டனர் என்று கிண்டலடிப்போரும் உண்டு. அவருடைய இரண்டு மனையாள்களின் குடும்ப வாழ்வும் மணமுறிவில் முடிந்தது என்பதும் சோகக் கதை.

**இயற்கை இழைத்த வஞ்சகம்**

ஆண் - பெண் என்று மனிதர்களைப் பாலினத்துவப்படுத்தினாலும். அதில் பாலூட்டியாக இருப்பது பெண்ணே. அதற்கேற்பவே அவளுக்கு உடலுறுப்புகள் இசைவடைந்திருக்கின்றன. மென்மை, அழகு, வசீகரம், தாய்மை, கருணை ஆகிய சில சிறப்பான குணங்கள் ஆண்களைவிடப் பெண்களிலேயே அதிகம் தூண்டப்படுகின்றன. ஆண்களின் உடலமைப்பும் அதன் சுபாவமும், ஏன் மனோபாவமும் கூடப் பெண்களின் பெரும்பாலான விடயங்களில் இருந்து வேறுபட்டிருக்கிறது. இனப்பெருக்கம், குழந்தைப்பேறு, பாலூட்டியாகச் செயற்படுதல் ஆகியவற்றுக்கு ஏற்ப படைப்பிலேயே பெண்ணின் உடல் தனித்துமானது. இதுவே அவளுக்குப் பலவீனமாகிப் பல விடயங்களில் அவளை முன்னிறுத்தப் பின்னடிக்கிறது. அதனால் ஆணுக்குப் பின்னால் ஓட வேண்டிய - இயங்கவேண்டிய நிர்ப்பந்தத்தை இயற்கையானது படைப்பு ரீதியாக ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் விளைவாகவும் பிரதிபலனாகவுமே ஆணைப் பின்தொடர்ந்த வாழ்க்கை முறையும், ஆணுக்குக் கீழான குடிமை முறையும், ஆணுக்கு அடுத்தபடியான தரநிலையும் எனச் சமூகத்தில் பாலின ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. படைப்பு எனும் இயற்கை பெண்ணுக்கு இவ்வாறுதான் வஞ்சகமிழைத்தது.

**மென்மையான அதிசயம்**

சமூகத்தில் ஆண், பெண் ஏற்றத்தாழ்வுகள், பெண்கள் மீதான அடக்குமுறைகள், வன்முறைகள் அதிகரித்திருப்பதற்குப் பெண்ணின் படைப்பே அடியெடுத்துக் கொடுத்தது. ஆணைவிட இயங்கு நிலையில் அதிக வலுவுடன் செயற்படக்கூடியவர்களாகப் பெண்கள் இருந்தால் நிலமை வேறாக இருந்திருக்கும். "என்னால் மரத்தில் ஏற முடியும் நீ ஏறிக்காட்டு பார்ப்போம்" என்று மார்பகங்களும் தொடைகளும் பெருத்த பெண்களைப் போட்டிக்கு அழைத்துக் குதர்க்கம் பேசும் மனித மனங்களில் அதை விதைத்தது இயற்கை என்கிற படைப்புத் தானே...?




# நல்ல போட்டி; ஆட்டம்தான் சரியில்லை


கபடியின் வழியே ஒரு குடும்பக் கதையை கிராமத்து வாசனையுடன் சொல்லியிருக்கும் படம் 'பட்டத்து அரசன்'.

காளையார் கோயில் எனும் கிராமத்தின் அசுர கபடி ஆட்டக்காரர் பொத்தாரி (ராஜ்கிரண்). அவரை அடித்துக் கொள்ள ஆளே இல்லை எனச் சொல்லும் அளவிற்கு ஊருக்காக கபடி போட்டிகளில் கலந்துகொண்டு கோப்பைகளை குவித்தவர். அவருக்குப் பிறகு அவரது மகன், பேரன் என 40ஆண்டுகளாக ஊருக்காக கபடி விளையாடி பெருமை சேர்த்தவர்கள். இப்படியான சூழலில், ராஜ்கிரண் குடும்பம் ஊருக்கு துரோகம் விளைவித்துவிட்டதாக அவர் மீது பழி விழ, அதனை துடைக்கும் பொறுப்பை ஏற்று களமிறங்குகிறார் சின்னதுரை (அதர்வா).

இறுதியில் அந்தக் குடும்பத்தின் மீதான பழியை அவர் துடைத்தாரா, இல்லையா என்பதுடன், ஒதுங்கியிருந்த

ஆனால், ஆண்கள் மாத்திரமன்றிப் பெண்ணைப் பின்னிலைப்படுத்தி வருவதில் அதே பங்கு பெண்களுக்கும் உண்டு. குழந்தைப்பேறும் அதன்பால் தொடர்கின்ற பாலூட்டல் என்கிற பெரும் பொறுப்பும் பெண்ணை வீட்டுக்குள் முடக்கிவிட அதைத் தொடர்ந்து வீட்டுப் பழுக்கள் மூலம் அவளை முடக்க முடிகிறது. ஐரோப்பிய - ஆங்கிலப் பெண்கள் பாலூட்டி என்ற நிலையை உதறித்தள்ளி வீட்டுக்குள் முடங்கா வலுவையும் கொண்டிருப்பதால் வீட்டுக்குள் முடங்காத நிலையை அடைந்திருக்கிறார்கள். ஆண்களைவிடப் பலவீனமாக இருப்பது மாத்திரமல்ல, ஆண்களால் தமக்குக் கீழ் பாதுகாக்கப்படுபவர்களாக இருப்பதும் - பெண்ணை ஆணில் தங்க வைப்பதும்கூடக் காலப்போக்கில் பெண் வாழ்வியலில் அவளைப் பின்தள்ளவே செய்கிறது. தம்மைத் தாமே அழகுப் பொருள் எனப் பறைசாற்றும் பெண்களும்கூட இந்தப் பின்னடைவுக்குக் காரணம்தான். மலர்போன்ற மென்மையுடன் படைக்கப்பட்டிருக்கும் பெண்ணுடல் மனிதப் படைப்பில் அதிசயங்கள் நிறைந்ததுதான். அந்த மலர் வனத்தில் தீயை இறைக்காமல் பனியாக இசைந்திருப்பதே ஆண்களுக்கு அழகளிக்கும். படைப்பின் எதிர்பார்ப்பும் அதுவே.





தனது தாத்தா குடும்பத்துடன் அவர் மீண்டும் எப்படி ஒன்று சேர்ந்தார் என்பதுதான் ‘பட்டத்து அரசன்’ சொல்லும் திரைக்கதை.

கிராமத்து குடும்பக் கதையை அதன் மணம் மாறாமல் திரையில் பரிமாற முயற்சித்திருக்கிறார் இயக்குநர் சற்குணம். உடன் கபடியை களமாக்கியிருக்கிறார். மண்சார்ந்த படைப்புகளில் தேர்ந்த அவர், வெற்றிலை விவசாயம், ஊர்மக்களின் கலாசாரம், கதாபாத்திரங்களின் பெயர்கள் முதற்கொண்டு கிராமத்து நெடியை தூவியிருக்கிறார். எந்த வகையிலும் அந்நியப்படாத அதர்வாவின் உடல்மொழியும், மீசையும், கம்பீரமான நடையும் அசலுக்கான அங்கீகாரத்தை தருகிறது. ஆக்ரோஷத்துடன் களமிறங்கும் கபடிக் காட்சிகள் ஈர்க்கின்றன.

மூத்த கபடி ஆட்டக்காரரான ராஜ்கிரண், நீளமான தாடியுடன் கிராமத்து கதைகளுக்காகவே அளவெடுத்து செய்த தோற்றத்தில் பக்காவாக பொருந்திப்போகிறார். அவமானப்பட்டு கூனிக் குறுகும்போதும், இறுதிக் காட்சியில் சீறிப்பாயும்போதும் இரு வேறு எல்லைகளிலும்தான் ஒரு சீனியர் நடிகர் என்பதை பதியவைக்கிறார். கதாபாத்திரத்துக்கான அவரின் நடிப்பு திரையில் பிரதிபலிக்கிறது. துணைக் கதாபாத்திரங்களாக ராஜ் அய்யப்பா, ராதிகா, ஜெயப்பிரகாஷ் சிங்கம் புலி, ஆர்.கே.சுரேஷ், பாலசரவணன் தேர்வு கச்சிதம். நாயகி ஆஷீகா ரங்கநாதன் காதல் மற்றும் பாடல் காட்சிகளுக்காக மட்டும் தலைக்காட்டிச் செல்கிறார். இறுதியில் அவர் ஸ்கோர் செய்யும் சில காட்சிகளைத் தாண்டி பெரிய அளவில் முக்கியத்துவமில்லாத கதாபாத்திரம். அவரையும் கபடி வீராங்கனையாகக் காட்டி, பொறுத்த தருணத்தில் அவரைக் களமிறக்கியுமிருந்த இயக்குநர் அவரது பாத்திரத்தை இன்னும் காத்திரமாக்க முயன்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

கபடிக் களமும் காட்சிப்படுத்தலும் சிறப்பு என்றாலும் வழக்கமான கிராமத்து குடும்பக் கதையை மீண்டும் படமாக்கிய அளவில் சுவாரஸ்யத்தை கூட்டவில்லை. பிரிந்த குடும்பத்துடன் சேர முற்படும் நாயகனின் வழக்கமான பாத்திரம் சோர்வு. அண்மையில் வெளியான ஹரியின் ‘யானை’ படமும்கூட இதே பாணிதான். படத்தின் அடிநாதமான சென்டிமென்ட் காட்சிகள் க்ளைமாக்ஸில் மட்டும் ஒட்டுகின்றன. தவிர, அதற்கு முன்புவரை பெரிய அளவில் அவை பார்வையாளர்களை பாதிக்கவில்லை. சென்டிமென்டுக்காக புகுத்தப்பட்ட காட்சிகளாகவே துருத்திக் கொண்டு தெரிகின்றன.



ஜிப்ரானின் பின்னணி இசைக்கோர்ப்பு காட்சிகளுக்கான தரமான வார்ப்பு. லோகநாதன் ஒளிப்பதிவில் கபடி ஆட்டங்கள் களைக் கட்டுகின்றன. குறிப்பாக அதர்வா பயிற்சி எடுக்கும் காட்சி நினைவில் நிற்கும் ப்ரேம். அளந்துவெட்டிய ராஜா முகமது படத்தொகுப்பு கச்சிதம். தொழில்நுட்பம் கைகொடுத்தாலும், ப்ரோ கபடியில் தேர்வான வீரனை அசால்ட்டாக வெற்றி கொள்வது, அனுபவம் கொண்ட கபடிக்குழுவை அனுபவமில்லாதவர்கள் எதிர்கொண்டு வெல்வது, அனல் பறக்கும் கபடிக்களத்தில் கல்யாணம் செய்வது என சினிமாத்தனங்கள் மிகையாகக் கிடக்கின்றன.

மொத்தத்தில் புதுமையில்லாத வழக்கமான கதை, பார்த்துப் பழகிய காட்சிகள், தர்க்கப் பிழைகளைக்கொண்டு உருவாகியிருக்கும் ‘பட்டத்து அரசன்’ அதற்கான திரை ஆட்சியில் சோபித்திருக்கிறானா என்பது சந்தேகமே!

# காரி

## இலக்கின்றிய பாய்ச்சல்

சொந்த ஊரைவிட்டு வெளியேறி சென்னையில் குடியேறிவிட்ட ஒரு தந்தையும் மகனுமான குடும்பத்தில் பல வருடங்களுக்குப் பின்னர் மகன் ஊருக்குத் திரும்ப வேண்டிய சூழலில் அவன் எப்படி ஊரைக் காப்பாற்றினான், நம்பிக்கை எப்படி வென்றது என்பதைப் பற்றிய கதைதான் காரி.

ஜல்லிக்கட்டு கதையின் மையப்புள்ளி என்கிற போதும், இயற்கைப் பாதுகாப்பு, நகரக் குப்பைகளின் பாதிப்பு என்று பலவற்றையும் தனக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டு திணறுகின்றது திரைக்கதை.

ராமநாதபுரத்தைச் சேர்ந்த காரியூர் மற்றும் சிவனேந்தல் இரண்டு கிராமங்களுக்கும் பொதுவான கோயிலாக கருப்பன் கோயில் இருக்கிறது. இந்தக் கோயில் நிர்வாகத்தை யார் நடத்துவது என்ற மோதல் வெடிக்க, ஜல்லிக்கட்டை நடத்தி, அதில் வெற்றி



பெறும் கிராம மக்களே அதனை நடத்திக்கொள்ளலாம் என முடிவெடுக்கப்படுகிறது. போட்டிக்கான களம் சூடுபிடிக்க, ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்துகொண்டு காளைகளை அடக்க, காரியூரை பூர்விகமாகக் கொண்டு சென்னையில் வாழும் சேதுவும் (சசிகுமார்) அவசியம் என்கிற நிலையில் அவரைத் தேடிச் செல்கிறார்கள் ஊர்ப் பெரியவர்கள். இறுதியில் கோயில் நிர்வாகத்தை யார் கைப்பற்றியது, சேது ஜல்லிக்கட்டில் கலந்து கொண்டு காளையை அடக்கினாரா என பல கேள்விகளுக்கு திரைக்கதை மூலம் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளாய் சசிகுமாரும் கிராமத்துக் களமும் 'கோந்து' போல ஒட்டிக் கொண்டு திரை ஆக்கத்திற்கு அடர்த்தி கூட்டுகின்றன. சென்னை களம் அவருக்கு அந்நியமாக தோன்றுவதுடன் அதன் வட்டார மொழியும் துருத்துகிறது. 'ஆடுகளம்' நரேன், ஜே.டி.சக்ரவர்த்தி, பாலாஜி சக்திவேல் நடிப்பில் குறைவைக்கவில்லை. 'காரி' காளை அல்லது கருப்பன் என அழைக்கப்படும் காளை மாடு ஒரு தனி கதாபாத்திரமாக திமிரும் விதம் அதற்கான காட்சிகள் ஈர்ப்பைக் கூட்டுகின்றன. அம்மு அபிராமி, ரெடின் கிங்க்ஸ்லி கதாபாத்திரங்கள் அப்பட்டமான திணிப்பை பளிச்சிடுகின்றன. அதேபோல, நாயகி பார்வதி அருண் அழுது புரண்டு நடிக்கும் காட்சி கவனம் பெற்றாலும், ஒட்டுமொத்த படமும், கதையும், அவரின் தேவையை எதிரொலிக்கவில்லை.

பொறுமையாகத் தனது பாய்ச்சலை நிகழ்த்தும் 'காரி'யின் முதல் பாதி இலக்கின்றி அலைபாய்கிறது. மொத்தப் படமுமேகூட பல களங்களில் கால் பதிக்கிறது. உதாரணமாக ஜல்லிக்கட்டை மையமாக கொண்ட படம், ஜீவகாருண்யம், குதிரைப்பந்தயம், காளைமாடுகளை வைத்து நடக்கும் கார்ப்பரேட் வணிகம், சுற்றுச்சூழல் பிரச்சினை, குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை என புகுந்து விளையாட முற்பட்டு முடியாமல் ஆங்காங்கே படுத்துவிடுகின்றது.

அதேபோல, இரண்டு சவால்களைக் கொடுத்து நாயகனை திணறடித்தது மட்டுமல்லாமல் பார்வையாளர்களுக்கு இரண்டாவது சவாலை புரிந்து



கொள்ள போராட வைத்திருப்பது அயற்சி. திணிக்கப்பட்ட காதல் காட்சியும், குழந்தை மீதான பாலியல் வன்முறை காட்சியும் எந்த வகையிலும் கதைக்கு உதவிபுரியாமல் தனித்து நிற்கிறது. அம்மு அபிராமி கதாபாத்திரம் இரண்டாம் பாதியில் எங்கிருந்து எதற்காக வந்தது? இறுதிக் காட்சியில் கலெக்டர் எங்கிருந்து வந்தார்? இப்படிப் பல கேள்விகளுக்கும் விடையைத் தேட வேண்டியிருக்கிறது.

ஹேம்நாத் இயக்கியிருக்கும் இப்படத்தை தாங்கி பிடித்

திருப்பது அதன் இறுதி 20 நிமிடங்களே. கணேஷ் சந்திராவின் ஒளிப்பதிவில் சீறிப்பாயும் காளைகள், தூக்கி வீசப்படும் வீரர்கள் புழுதி பறக்கும் ஆடுகளத்தின் காட்சிகள் ரசனைக்கு தீனி. டி.இமானின் பின்னணி இசையும், ஸ்லோமோஷனும் கலந்த ஜல்லிக்கட்டுக் களமும், காட்சிகளும் ஒட்டுமொத்த படத்தையும் தாங்கி நிற்கின்றன. படத்தின் ஆன்மாவுக்கான நியாயத்தை சேர்க்கும் இறுதிக்காட்சி சோர்ந்திருக்கும் பார்வையாளர்களுக்கு டானிக்.

மொத்தத்தில் ‘காரி’ இரண்டாம் பாதியில் குறிப்பாக உச்சக்காட்சியில் காட்டிய சீற்றத்தை படத்தின் தொடக்கம் முதலே காட்டத் தவறியதால் களம் சூடுபிடிக்கவில்லை. தவிர, இலக்கில்லாமல் பாய்ந்ததால் பதம் பார்க்கப்பட்டது திரைக்கதை மட்டுமல்ல..!



# ஏஜெண்ட் கண்ணாயிரம்

## சோதனை!

நகைச்சுவையைக் குறைத்துக்கொண்டு ஒரு கதாநாயகனாகும் சந்தானத்தின் முயற்சியாகவே 'ஏஜெண்ட் கண்ணாயிரம்' படத்தைப் பார்க்க முடிகின்றது.

வருமானத்துக்கு விழிபிதுங்கும் பிரைவேட் டிடெக்டிவாக இருக்கும் கண்ணாயிரம் (சந்தானம்) தனது தாயின் இறப்புச் செய்தி அறிந்து சொந்த ஊரான கோவைக்குச் செல்கிறார். ஆனால், அவர் செல்வதற்குள்ளாகவே எல்லாம் முடிந்துவிட, இறுதியாக அம்மாவைக் காணமுடியவில்லையே என்ற வருத்தத்தில் இருக்கிறார். அப்போது சொத்து பிரச்சினை எழ, சில காலம் அந்த ஊரில் தங்க வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற்படுகிறது.

இந்தக் காலகட்டத்தில் ஊரில் அடையாளம் தெரியாத சடலங்கள் மர்மமான முறையில் தொடருந்துத் தடங்களின் பக்கத்தில் கிடக்கும் தகவல் அவரை உசுப்புகின்றது. இதை துப்பறிய களமிறங்கும் சந்தானம், இதற்கான காரணத்தையும், அதற்கு பின்னால் உள்ள குற்றங்களையும் எப்படி கண்டுபிடித்தார் என்பதுடன், அவரையும் இந்த விவகாரம் தனிப்பட்ட முறையில் எப்படி பாதிக்கிறது என்பதையும் சொல்வதுதான் திரைக்கதை.

தெலுங்கில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற ‘ஏஜென்ட் சாய் ஸ்ரீனிவாச ஆத்ரேயா’ படத்தின் தமிழ் ரீமேக்கான இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் மனோஜ் பீதா. அந்தப் படத்தை அப்படியே காட்சி மாறாமல் மறுஆக்கம் செய்வதற்கு பதிலாக பல மாற்றங்களை செய்திருக்கிறார் இயக்குநர்.

தொப்பி, கண்ணாடி, அதற்கேற்ற கோட், யதார்த்தத்தை புரிந்துகொள்ளும் பக்குவம், அம்மாவை

எண்ணி உருகும் சென்டிமென்ட் காட்சிகள் என புதுமை காட்டியிருக்கும் சந்தானம், அவர் இறங்கியடிக்கும் 'நகைச்சுவை' தடத்தில் சறுக்குகிறார்.

ஒருசில இடங்களில் வரும் புன்முறுவலைத் தாண்டி பெரிதாக நகைச்சுவை கைகொடுக்கவில்லை. 'ப்ளாக் காமெடி' பாணியும் நழுவுகிறது. ரெடின் கிங்க்ஸ்லி, 'குக் வித் கோமாளி' புகழ், குரு சோமசுந்தரம் கதா பாத்திரங்கள் காட்சிகளில் திணிக்கப்பட்டு வீணடிக் கப்பட்டுள்ளன. காவல்துறையிடம் புகழ் அறைவாங்கும் காட்சி மட்டும் சிரிப்புக்கான ஆறுதல். ரியா சுமன், ஸ்ருதி ஹரிஹரன் தங்களுக்கான பணியை செய்ய, முனிஷ்காந்து ஓரிடத்தில் நடிப்பில் கவனம் பெறுகிறார்.

'ப்ளாக் காமெடி'யாகக் கொண்டு செல்வதா அல்லது 'சீரியஸ் கலந்த காமெடி'யில் கொண்டு செல்வதா எனப் படத்தை எந்தப் பாணியில் நகர்த்திச் செல்வது என்ற குழப்பம் திரைக்கதையில் பளிச்சிடுகிறது. இதனால், காட்சிகளின் அடர்த்தி பார்வையாளர்களுக்கு முறையாக கடத்தப்படாமல் விலகி நிற்கிறது. உதாரணமாக, தனது தாய் குறித்து சந்தானம் சீரியஸாக பேசிக் கொண்டிருக்கும்போது அந்த தன்மையை மாற்றும் வகையில் புகழ் நகைச்சுவை என்ற பெயரில் முயற்சிப்பது ஒட்டுமொத்த காட்சியையும் பலியாக்கிவிடுகிறது. இப்படியாக ஒவ்வொரு காட்சியும் அதன் நோக்கத்திலிருந்து விலகி திசைமாறியிருப்பதும், அதற்கே உண்டான உணர்ச்சிகள் முறையாக கடத்தப்படாமலிருப்பதும் சிக்கல். சோதனை முயற்சியாக எடுத்துக்கொண்டாலும் அது பெரிதாகப் பயனளிக்கவில்லை.

'ஏஜென்ட் கண்ணாயிரம் வாடகை 2 ஆயிரம்' என மிகச் சில எதுகை மோனை வசனங்கள் எடுபட்டாலும், பெரும்பாலானவை கவராமலேயே போய்விடுகின்றன. இரண்டாம் பாதியில் துப்பறியும் காட்சிகள் ஓரளவு வேகமெடுத்தாலும், அதுவும்கூட முழுமையற்று திட்டு திட்டாக எஞ்சி நிற்கின்றன. மனப்பாடம் செய்து ஒப்பிப்பது போல எல்லாவற்றையும் சந்தானம் வசனங்களின் வழி கூற, 'அவர் அங்க போகவே இல்லையே எப்படி இது தெரிஞ்சது' என கேள்விகளும் முளைக்கின்றன. படம் முழுக்க சஸ்பென்ஸை ஏற்றி வந்து க்ளைமாக்ஸில் அதை மொத்தமாக இறக்கும் காட்சியை அழுத்தமேயில்லாமல் தேமேவென கடத்தியிருப்பது முழுமையிலிருந்து மொத்த விலகல்.

தொய்வான திரைக்கதையில் யுவன்சங்கர் ராஜாவின் பின்னணி இசை உற்சாகத்தைக் கூட்டுகிறது. படம் முழுவதும் ரெட்ரோ ட்யூனை பயன்படுத்தி இசையமைத்திருந்த விதம் ஈர்க்கிறது. தேனி ஈஸ்வர் - சரவணன் ஒளிப்பதிவில் இரவுக் காட்சிகள் தனித்து நிற்கின்றன. படத்தொகுப்பில் சில இடங்கள் நான்லீனியராகக் கையாளப்பட்டபோதும் இன்னும் கச்சிதமாக்கியிருக்கலாமோ எனத் தோன்றுகிறது.

மொத்தத்தில் காட்சிகளின் அடர்த்தியை கடத்துவதில் ஏற்பட்ட தடுமாற்றம், தொய்வான திரைக்கதை, பெரிதாக சுவாரஸ்யம் கூட்டாத துப்பறியும் காட்சி, கைக்கொடுக்காத நகைச்சுவை என்பவற்றால் கண்ணாயிரம் பார்வையிழந்து நிற்கிறது. இதன் அசல் படைப்பான 'ஏஜென்ட் சாய் ஸ்ரீனிவாச ஆத்ரேயா' அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் காணக்கிடைக்கிறது. அசலைப் பார்த்தவர்களுக்கு இப்படம் ஏமாற்றம் கொடுத்தாலும், அதைப் பார்க்காதவர்களுக்கு புதிய கதை அனுபவத்தை கொடுக்கலாம். ஆனால், திருப்திப்படுத்தும் என்று சொல்லிவிடமுடியாது.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781